சாயி மகராஜ் குருவை தேடி
SAI MAHARAJ GURUVAI THEDI

ஆண்டு: 1	இதழ்: 8	ஜனவரி - 2019	தட்சிணை
VOL: 1	ISSUE8	JANURY - 2019	DONATION

தனிச்சுற்றுக்கு மட்டும்



அண்ணாமலையின் அருந்தவப் புதல்வன்
ஸ்ரீ சேசாத்திரி சுவாமிகள்



உன்னை
நோக்கி
வருகின்றோம்!

ஜெய் சாய் ராம்

சமர்த்தா

டூர்ஸ் – டிராவல்ஸ்

ஷீரடி புனித யாத்திரை

OM

Spiritual Journey to Shiridi

சென்னையிலிருந்து விமான பயணம்

Package Price
₹9900/-
prices vary on the marked dates

வி.ஐ.பி.தரிசனம், 4 ஸ்டார் ஹோட்டல்
புனே-சீரடி ஏசி பஸ் உட்பட

ஜனவரி:
16-17, 25-26

₹10,900/-
மும்பை வழியாக

வி.ஐ.பி.தரிசனம், 4 ஸ்டார் ஹோட்டல்
மும்பை-சீரடி ஏசி பஸ் உட்பட

பார்க்கும் இடங்கள்
மஹா கணபதி கோயில், ஸ்ரீ சனிதேவ் கோயில், ரேணுகாதேவி கோயில், வாஹேஸ்வரர் கோயில்

மேலும் விபரங்களுக்கு தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி

சமர்த்தா டூர்ஸ் & டிராவல்ஸ்

எண்.11, முதல் மாடி, வெங்டேஸ்வரா அக்ரஹாரம் ரோடு (சாய்பாபா கோவில் எதிரில்)
மைலாப்பூர், சென்னை-4. Email: samarthatoursandtravels21@gmail.com

98428 20509 / 73734 09000 / 044-4855 7749

பாபா பக்தர்கள் அனைவருக்கும் ஆங்கில புத்தாண்டு
மற்றும் தை பொங்கல் நல்வாழ்த்துக்கள்!



சாயி மகராஜ் குருவைதேடி ஆன்மீக மாத இதழ்

ஸ்ரீ சாயிராம் ஆத்ம ஞான சபை

ஆசிரியருடன் சீரடி புனிதப் பயணம் மே 1.

தொடர்பிற்கு: 99418 6692 / 88258 31068

OM SAI RAM

Dr.K.G.RADHAKRISHNAN M.D.(A.M)
Govt Reg No: AA 24184

Dr.G.R.AJAY BAMS
AYURVEDIC CONSULTANTS

KOTTAKKAL ARYAVAIDYA SALA

Specialist in:
Allergy, Asthma,
All Arthritis
Vericose Vein & Piles



NO: 424/A, KILPAUK GARDEN ROAD, KILPAUK
Near SIGNAL, CHENNAI - 600 010.

PANCHA KARMA TREATMENT


MOBILE: 94442 13660 / 9790883948

HAPPY NEW YEAR 2019

BHAKTHI SHRUTHI

BY

Dr.K.G.RADHAKRUSHNAN & GROUP



ALL DEVOTIONAL & LIGHT
MUSIC PARTY
SAYEE BHAJANS

MOBILE: 94442 13660, 97908 83948

சாயி மகராஜ் குருவை தேடி
SAI MAHARAJ GURUVAI THEDI

ஆண்டு-1 மலர்-8 ஜனவரி- 2019

வெளியிடுபவர் / ஆசிரியர்
V.ஸ்ரீராம்

கௌரவ ஆசிரியர்
S.ஜெயந்தி

விளம்பர பிரிவு
திரு.T. கார்த்திகேயன், கோவை
8778874339

சிட்டி சர்க்குலேசன்
திரு.R. அபிஷேக், சென்னை

பொது ஜனத் தொடர்பு
திரு. அன்புக் கண்ணன்

கௌரவ ஆலோசகர்கள்
திரு. L காமராஜ், சென்னை
திரு.B.S.ஹரி கிருஷ்ணன், சென்னை
A.சரண்யா, M.Com
Dr.G.கீர்த்தி சௌஜன்யா, B.D.S., சென்னை
திரு.N.ராகவேந்திரன், சென்னை
திரு.B.முருகன், சோழவந்தான்
திரு.T.ரவி- குடந்தை
திரு.S.P.பாண்டியன், குடந்தை
திரு. G.S.சந்திரசேகரி, HCL., சென்னை

வலைதள வடிவமைப்பு
திரு.பா.செந்தில் குமாரி
சாயி பக்தி சேவகர்
திரு.சாயிநி மாதவராஜ்.G

இதழ் வடிவமைப்பு
சிகரம் பதிப்பகம்

உங்கள் கருத்துக்கள், சிந்தனைகள் மற்றும் விமர்சனங்களை அனுப்ப வேண்டிய முகவரி:-

V.ஸ்ரீராம்
எண்:17/7,A- பழனியப்பா முதல் தெரு,
1வது மாடி, அயனாவரம்,
சென்னை 600 023.
செல்: 8825831068, 9941816692



சாயி மொழி

என்னை பூர்வ புண்ணியம் உள்ளவர்கள் மட்டுமே வணங்க முடியும். என்னுடைய அனுமதியின்றி என்னை யாரும் தரிசிக்க முடியாது. உன்னுடைய பூர்வ சென்ம பலன் கைகூடும் பொழுது நான் உன் துன்பங்களை துடைக்க காட்சி கொடுக்கின்றேன்.

நான் எவர்களுக்கெல்லாம் கிருபை செய்ய விரும்புகிறேனோ அவர்களிடம் எல்லாம் பலவிதமான மாறுவேடங்களில் தோன்றி கணக்கற்ற அற்புதங்களைத் திட்டமிட்டு நிறைவேற்றுவேன். நீங்கள் என்னை வணங்குகிறீர்கள் என்றால் நீங்கள் புண்ணியசாலிகள்.

நன்மை பெறுவதற்கு தகுதி உடையவர்கள் என்பதில் சந்தேகம் வேண்டாம். நீ என் நாமத்தை அன்புடன் உச்சரித்தால், உன்னுடைய முன்னும், பின்னும் எல்லா திக்குகளிலும் சூழ்ந்து உன்னை காப்பேன்.

- ஷீரடி சாய் பாபா

ஆசிரியர் பக்கம்...

அன்பிற்கினிய சாய் சொந்தங்கள் அனைவருக்கும் வணக்கம்!



சற்குரு சாயி நாதரின் அருளால் 8வது இதழ் மூலம் உங்களை சந்திப்பதில் பெருமகிழ்ச்சி. சென்ற இதழின் வெளியீட்டு விழா நமது ஸ்ரீ சாய்ராம் ஆத்ம ஞான சபையில் (17/7ஏ பழனியப்பா முதல் தெரு, அயனாவரம், சென்னை) 2.12.2018 ஞாயிறு காலை 10 மணிக்கு துவங்கியது.

சாயி சேவகர் திரு.ஜி.மாதவராஜ் அவர்களின் அழைப்பின் பேரில் விழாவிற்கு வந்து சிறப்பித்த சென்னை சைதாப்பேட்டையை சேர்ந்த சாயிசேவகி திருமதி.ஜெயந்தி முரளி அவர்கள் புத்தகத்தை வெளியிட அண்ணா நகர் சாயி சேவகர் திரு.உமா சங்கர் அவர்கள் பெற்றுக் கொண்டு சிறப்பித்தார்கள்.

திரு.எஸ்.மாதவன் அவர்கள் பக்திப்பாடல் பாட, ஆசிரியர் அவர்கள் ஆரத்தி காட்ட திரு.யுவராஜ் அவர்கள் சங்குநாதம் எழுப்ப விழா இனிதே நிறைவானது. ஸ்ரீ சாய்ராம் ஆத்ம ஞான சபையினர் விழாவிற்கு வந்திருந்த அனைவருக்கும் அன்னதானம் செய்வித்தனர்.

சென்ற மாதத்தில் கஜா புயலால் டெல்டா மாவட்டத்திற்கு ஏற்பட்ட பேரழிவிற்காக எங்களால் முடிந்த நிவாரண உதவியை அனுப்பி வைத்தோம். மேலும் அவர்களின் நல்வாழ்விற்காக பிரார்த்தனை செய்தோம். நிவாரண உதவி அளித்து உதவிய அனைத்து நல்ல உள்ளங்களும் நன்றியை எதிர்பார்த்து செய்யவில்லை. இருப்பினும் அவர்கள் அனைவருக்கும் நன்றியை தெரிவித்துக் கொள்கின்றேன்.





புத்தக வெளியீட்டிற்கு வந்த சாயிசேவகர் திரு.உமா சங்கர் அவர்கள் புத்தகத்தின் வளர்ச்சிக்கு உதவுவதாக உறுதி அளித்து சொன்னது போலவே உடனடியாக பாபா பக்தர்களிடம் ஆயுள் சந்தா பெற்று தந்தார். அவருக்கு பாபாவின் பூரண ஆசி கிட்ட பிராத்திக்கின்றோம்.

அதேபோன்று நமது சாயி மகராஜ் குருவை தேடி புத்தகத்தை கடையினில் வாங்கிப் படித்த சாயி பக்தரான திரு.D.ராஜசேகர் என்ற அன்புச் சகோதரர் அவராகவே சாயி பக்தர்களிடம் 10 நபர்களிடம் வருட சந்தா வாங்கிக் கொண்டு, முதல் முறையாக ஒரு வியாழக்கிழமை என் வீட்டிற்கு வந்து வழங்கினார். எப்படியாவது எதன் மூலமாவது பாபாவிற்கு சேவை செய்ய வேண்டும் என்ற தீவிர பாபா பக்தரான அன்புச் சகோதரர் திரு. D.ராஜசேகர் அவர்களுக்கும் பாபாவின் ஆசீர்வாதங்கள் என்றென்றும் கிட்ட பிரார்த்திக்கின்றேன்.

அன்பு நண்பர் திரு.T.கார்த்திகேயன் அவர்களும் நமது பத்திரிகைக்கு பல வகையில் உதவி வருகின்றார். அவரும் தன் பங்கிற்கு பல நண்பர்களிடம் ஆயுள் சந்தா பெற்றுத் தந்து கொண்டு இருக்கின்றார்.

இவர்கள் அனைவர் வடிவிலும் நான் பாபாவை காண்கிறேன். மேலும் அன்புச் சகோதரர் 'பிரார்த்தனை செம்மல்' திரு.கலியன் அவர்கள் சேலத்தில் இருந்து அவரது சொந்த வேலையாக சென்னை வந்தவர்.

என்னை தொலைபேசியில் தொடர்பு கொண்டு இன்று நான் உங்கள் இல்லத்திற்கு வருகிறேன் என்று இன்ப அதிர்ச்சி கொடுத்தவர், தன் நண்பர் வி.ஆர்.ரமேஷ்குமார் அவர்களுடன் வீட்டிற்கு வந்து, நமது சாயி மகராஜ் குருவைதேடி புத்தகத்திற்காகவும் எனது குடும்பத்திற்காகவும் ஒரு மணிநேரம் பிரார்த்தனை செய்தார்.

பாபாவிற்கு சேவை செய்யும் எண்ணத்திற்கும், அவரது பிரார்த்தனைக்கும் கோடானுகோடி நன்றிகள்! அன்பு சகோதரரை வாழ்த்தும் அளவிற்கு வயதும், அனுபவமும் எனக்கில்லை. எனவே நானும் என் குடும்பத்தாரும் அவரை வணங்கி மகிழ்கின்றோம். அனைவரும் அனைத்து நலன்களும் பெற எல்லாம் வல்ல சாயிநாதரிடம் பிரார்த்தித்து நிறைவு செய்கின்றேன். மீண்டும் சாயியின் அருளால் அடுத்த இதழில் சந்திப்போம்.

வாழ்க வளமுடன்! வாழ்க வையகம்!!

அன்புடன் ஆசிரியர்



நிகழ்காலம்

மரணத்திற்குப் பிறகு என்ன நடக்கிறது என்பதை அறியவே பெரும்பாலோர் விரும்புகின்றனர். ஆனால் இன்றைய வாழ்வை குறித்து அதே முக்கியத்துவத்துடன் யாரும் இருப்பதாகத் தெரியவில்லை.

அப்படியே விசாரித்தாலும் அது எதிர்காலம் குறித்தே அறிவதாக இருக்கும் நம் கையில் உள்ள இந்த நிமிடத் தை குறித்து அறிய அதை இயன்ற அளவு மகிழ்ச்சியும் அழகும் நிறைந் தாக ஆக்குவதற்கான வழி என்ன என்று ஆராய்வதற்கு யாரும் முன் வருவதில்லை. எதிர்காலத்தைக் குறித்து புலம்புவதை விட இந்த வாழ்வில், இந்த நிமிடத்தில் என்ன நடக்கின்றது என்பதை சிந்திப்பது நல்லது அல்லவா?

கையில் இருக்கும் இந்த நிமிடத்தை இழந்துவிட்டு நாளைய தினத்தை பற்றி சிந்தித்து மனநிம்மதியை இழப்பது அறிவுள்ளவர்கள் செய்யும் செயல் இல்லை அல்லவா?

ராணுவத்தில் பணியாற்றும் ஒருவர் தன்னுடைய ஒரே மகனின் பிறந்த நாளைக்கு வீட்டுக்கு வருவதாக மனைவிக்கு உறுதியளித்திருந்தார். எனவே தன் மேலதிகாரியிடம் இரு வாரம் விடுப்பு கேட்க அவரோ 5 தினங் கள் மட்டுமே அனுமதி அளித் தார்.

கணவன் வீட்டிற்கு வந்தபோது மனைவி மிகவும் மகிழ்ச்சி அடைந்தாள். ஆனால் ஐந்து தினங்களுக்கு பின் திரும்பி சென்று விடுவார் என்பதை அறிந்தபோது அவர் ஏமாற்றம் அடைந்தார். அதன் பின்னர் அவள் ஒரு நிமிடம் கூட மகிழ்ச்சியாக இருக்க முடியவில்லை நாள் முழுவதும் கணவர் திரும்பி செல்வதைப் பற்றி மட்டுமே சிந்தித்துக் கொண்டிருந்தாள்

இவ்வாறாக 5 தினங்களும் அவள் துன்பத்துடன் செலவிட்டாள். மாறாக 5 நாட்கள் கணவருடனும், மகளுடனும் மகிழ்வுடன் செலவிட அவள் முயன்றிருந்தாள் அந்நாட்கள் மிகவும் இனிமையான அனுபவமாக மாறி இருக்கும். நம்மில் பெரும்பாலோர் இவ்விதமே நடந்து கொள்கிறோம்.

நமது எதிர்காலம் மற்றும் இறந்த காலத்தைப் பற்றி மகிழ்ச்சியுடன் வாழ தீர்மானித்தால் அதுவே அர்த்தமுள்ள வாழ்க்கை ஆகும். மரணத்தோடு எல்லாம் முடிவடைகிறது. ஆகவே வாழும் காலம் வரை உண்டு, குடித்து கொண்டாடுங்கள் என்று கூறும் சிலரும் இருக்கின்றார்கள்.

இவ்வுலக பொருட்களை தனக்கு சொந்தமாக்க நடைபெறும் ஓட்டத்தில் அவர்கள் வாழ்வை ரசித்து அனுபவிக்க மறந்து விடுகின்றார்கள். முடிவற்ற இந்த ஓட்டத்திற்கிடையே நம்முடைய அனுமதியில்லாமல் திடீரென ஒருநாள் மரணம் வந்து நம்மை அழைத்துச் செல்லும்.

இறப்பதற்கு யாரும் விரும்புவ தில்லை. ஒவ்வொரு உயிரினமும் வாழ்வை மிகவும் விரும்புகிறது. ஆனால் அந்த வாழ்க்கையை தனக்கும், உலகிற்கும் மகிழ்ச்சி அளிப்பதாக மாற்றுவது எவ்வாறு என்பதை அவர்கள் அறிவதில்லை. இரண்டு பெண் பிள்ளைகளை பெற்ற என் நண்பர் ஒருவர் உலக வழக்கப்படி பிள்ளைகளின் எதிர் காலத்திற்காக பெரும் பொருள் சேர்க்க எண்ணம் கொண்டார்.

மனைவியையும் தன்னுடன் இணைத்துக் கொண்டு பெரிய வியாபார நிறுவனத்தை தொடங்கி எந்நேரமும் கடை, வியாபாரம், என்று பணம் சேர்ப்பதிலேயே கவனமாக இருந்தார்கள் கணவனும், மனைவியும் எல்லாம் பிள்ளைகளுக்காக தானே அவர்களின் எதிர் காலம் நன்றாக இருக்க வேண்டும் என்பதற்காக தான் என்று வாய்க்கு வாய் கூறிக்கொண்டார்கள். அந்தப் பிள்ளைகளோடு ஒரு நிமிடம் கூட மனம் விட்டு பேச அவர்களுக்கு நேரமில்லை. அவர்கள் நினைத்ததைவிட விட அதிக பணம் சேர்ந்தது. அவர்களது குழந்தைகளும் அவர்களுக்கு தெரியாமலேயே வளர்ந்து பெரியவர்களானார்கள்.

திடீரென அவர்களது மகள் கள் அடுத்தடுத்து தவறான இளைஞர்களுடன் ஓடிப்போனார்கள். பணத்தை முதல் இடத்தில் வைத்து மனதை இரண்டாமிடத்தில் வைத்தவர்களின் கதை எல்லாம் இவ்விதம்தான் அல்லாடிக் கொண்டிருக்கின்றன

இவ்வுலகில் அனைத்து உயிர்களின் வாழ்க்கை விலைமதிப்பற்றதும், விருப்பமானதும் ஆகும். அப்படி இருப்பினும் வாழ்க்கை மூலம் நாம் பெறவேண்டிய மகிழ்ச்சியையும் திருப்தியையும் பெற முடியவில்லையே?

நாம் பெரும்பாலும் வாழ்வை சபித்தபடி நாட்களை கடத்துகின்றோம். அனைவரின் வாழ்விலும் முன் வினைப்பயன் காரணமாக துன்பங்கள் வந்து சேரும். நிகழ்காலத்தில் நாம் உருவாக்கும் துன்பங்களை நம்மால் நிச்சயமாக விளக்கிவிட முடியும். வாழ்வில் நடப்பவைகளை எவ்வித எதிர்ப்பும் மறுப்பும் இல்லாமல் ஏற்றுக் கொள்ள நாம் கற்றுக் கொள்ள வேண்டும்.

இந்த நிமிடம் மட்டும் தான் நம் கைகளில் உள்ளது. அதை விவேகத்துடன் பயன்படுத்தினால் நிகழ்காலம் மட்டுமல்ல எதிர்காலமும் இன்பம் நிறைந்ததாக ஆகும் துன்பங்களுக்கு நடுவிலும் உள் மனதில் அமைதியை அனுபவிக்க முடியும்.

அண்ணாமலையின் அருந்தவப் புதல்வன்

ஸ்ரீ சேசாத்திரி சுவாமிகள்

இராமாயணம் படி இராமாயணம் படி என்கிறீர்களே.. இராமாயணத்தை எப்படி படிக்க முடியும். இராமாயணத்தின் படி நடக்கதானே வேண்டும், இப்படி கேட்டவர் மகான் ஸ்ரீசேசாத்திரி சுவாமிகள். திருவண்ணாமலை பல்கலைக் கழகத்தின் தலைசிறந்த மாணவர்களில் முதன்மையானவர் மகான் ஸ்ரீசேசாத்திரி சுவாமிகள் என்றால் அது உண்மையே.

1870ஆம் ஆண்டு சனவரி மாதம் 22ஆம் நாள் சனிக்கிழமை காஞ்சிபுரத்தில் வரதராஜ சோதிடர் மரகதம்மாள் தம்பதியினரின் மூத்த மகனாக ஸ்ரீசேசாத்திரி என்னும் பெயரோடு இம்மண்ணுக்கு வந்தார்.

தன் தவழும் வயதிலேயே அற்புதங்களை நிகழ்த்த தொடங்கினார் ஸ்ரீசேசாத்திரி. ஒரு பொம்மை கடையில் வியாபாரம் ஆகாமல் கன்னத்தில் கைவைத்து அமர்ந்திருந்தார் ஒருவர். தன் தாயின் மடியில் இருந்து தவழ்ந்து சென்று அந்த பொம்மை கடையில் இருந்த கிருஷ்ணர் பொம்மையை எடுத்தார். என்ன ஆச்சரியம் சற்று நேரம் தான் அந்த கடையில் உள்ள பொம்மை அனைத்தும் விற்று தீர்ந்தன

அன்று முதல் தங்கக்கை சேஷாத்ரி என பெயர் பெற்றார். பிறகு தாய் அருணாச்சலம், அருணாச்சலம் என்று கூறி உயிரை விட்டார் தாய் மரணத்திற்குப்பின் திருவண்ணாமலை காதல் முற்றியது.

எந்நேரமும் அருணாச்சலத்தை உச்சரித்து சுடுகாட்டில் தவம் புரிந்து 1889 ஆம் ஆண்டு தன்னுடைய 19வது வயதில் திருவண்ணாமலை வந்து சேர்ந்தார்.

அதன் பின்பு சமாதி ஆகும் வரை 40 ஆண்டுகள் அண்ணாமலையை விட்டு அகலாமல் அவர் ஆடிய சித்துக்கள் ஏராளம். அதிசயங்கள் ஆயிரமாயிரம். அண்ணாமலையை சுற்று, மோட்சம் கிட்டும். திருப்புகழ் தான் மந்திரம் பல தெய்வங்களை விடு, ஒன்றை நம்பு, ஆபத்துக்கு உதவும். இங்கு எதுவும் சொந்தமில்லை, இதுவே ஸ்ரீ சேசாத்திரி உபதேசங்கள். ஓர் இடத்தில் நிலையாய் எப்போதும் அமர்ந்து இருப்பதில்லை சுவாமிகள் எப்போதும் எங்காவது ஓடிக்கொண்டே இருப்பார்கள்

1909ஆம் ஆண்டு போளூரில் விட்டோபா சுவாமிகள் முக்தி அடைந்த அதே நேரம் திருவண்ணாமலை தேரடி தெருவில் ஓடிக்கொண்டே விட்டோபா போகின்றான் என்று உரக்கக் கூறினார்.

ஒருமுறை பிண ஊர்வலத்தில்

நடந்து கொண்டிருந்தவர் ஒரு திருமண வீட்டிற்குள் நுழைந்து விட்டார். அறியா மக்கள் சுவாமிகளை கண்டு முகம் சுளிக்க, சுவாமிகளோ விடுவிடு என்று சமயலறைக்குச் சென்று அங்கு கொதித்துக் கொண்டி ருந்த சாம்பார் அண்டாவை உதைத்து தள்ளிவிட்டார். சாம்பாருக்குள் செத்த பாம்பை கண்டு சுவாமிகளை வணங்கியது கூட்டம்.

இவர் தொட்டால் சுபிட்சம், அடி வாங்கினால் அருள்மழை தழுவி னால் சாபம் போகும், திட்டினால் தோசம் போகும், தடவினால் நோய் நீங்கும், சொன்னால் பலிதம் ஆகும், செல்வம் கொழிக்கும், பார்த்தால் பாவ விமோசனம். இவை எல்லாம் சேசாத்திரியின் செயல் விளக்கங்கள்.

காகினி தேவி என்ற உறவுக்காரப் பெண்ணை ஸ்ரீ சேசாத்திரிக்கும் மணம் முடிக்கப் பார்த்தனர். தேகத்தை மறந்த ஸ்ரீ சேசாத்திரிக்கு தேக சம்பந்தமா.

1905ல் திருவண்ணா மலையில் பிளேக் என்ற நோய் வந்து பல உயிர்களை பலி வாங்கியது. எல்லாம் உன்னால்தான், நீயொரு மாயாவி என சில மூடத் தனமான காவல் அதிகாரிகள் சுவாமிகளை பிடித்து சிறையில் அடைத்தனர்.

சிறையில் அடைத்த அதிகாரி வேலை முடிந்து வீட்டிற்கு திரும்பு கையில், சுவாமிகள் தனக்கு எதிரே நடந்து வருவதைக் கண்டு வியப்புற்ற அதிகாரி காவல் நிலையத்திற்கு செய்தி அனுப்ப, ஆனால் அங்கோ சிறையுனுள்ளும் சுவாமிகள் இருப்பதை கேள்வியுற்று, சித்தனை சிறையில் அடைக்க இயலாது என்பதை அறிந்த அதிகாரி சுவாமிகளிடம் மன்னிப்பு கேட்டு அவரை விடுவித்தார்.

1928ம் ஆண்டு பகவான் இரமணருக்கு புதிய சோபா ஒன்றை அவரின் பக்தர்கள் பரிசளித்து அதில் அமரும்படி வேண்டினர். பகவான் ரமணர் மெல்ல முறுவலித்து, "எனக்கு உட்கார வேண்டும் என்று தோன்றவில்லையா என்ன? நான் என்ன சேசாத்திரி மகானைப் போல தேகத்தை மறந்திருக்கிறேனா?" என்று கேட்டார்.



"யாமே பார்வதி தேவி. இதோ என் மகன் கந்தன்" என்று பாதாலிங்கத்தில் தவமிருந்த பகவான் ரமணருக்கு பாதுகாப்பு அளித்து ஆவரை வெளி உலகுக்கு உரக்கச் சொன்னவர் சேசாத்திரி சுவாமிகள் அல்லவா?

அதே பகவான்தான், மகான் சேசாத்திரி சுவாமிகள் முக்தி அடைந்தபோது சமாதி வைபவத்திற்கு வந்து நடத்தி வைத்துச் சென்றார் ,என்பது ஆன்மீக வரலாற்றின் அபூர்வ செய்தி.

திருவண்ணாமலை சன்னதி தெரு சின்ன குருகள் வீட்டில் சேசாத்திரி மகானுக்கு முகச்சவரம் செய்து அவருக்கு அபிசேகம் செய்கின்றோம் என்று குடம் குடமாக பாலும் தண்ணீரும் ஊற்றினார்கள் பக்தர்கள்.



வழக்கமாக ஓடிப்போய்விடும் மகான் அன்றைக்கு என்னவோ அடங்கி உட்கார்ந்திருந்தார். அதன்பின்பு குளிராால் நடுங்கினார். உடலோ அனலாய் கொதித்தது. இதற்கு பாமர மனிதர்கள் குளிர் சுரம் எனப் பெயர் சூட்டினர்.

சக்தி குளிர்ச்சி, சிவம், வெப்பம், சக்தியும் சிவனும் சேசாத்திரி உடலில் குடியேறினர். அதுதான் குளிர்ச் சுரத்தின் பொருள். 1929ஆம் ஆண்டு சனவரி 4ம் நாள் மகான் சேசாத்திரி இறைவனுடன் கலந்தார்.

மண்ணறைக்கு போன மகான்களுக்கு மரணம் என்பது ஏது? பரம் பொருளுடன் அய்க்கியமான மகான்கள் நம்மைக் காக்கின்றார்கள். வழி நடத்துகின்றார்கள். குருநாதர்களாக இருந்து திருவருள் புரிகின்றார்கள் என்பதும் பக்தி செய்யும் பாமரனுக்கு புரியும்.

வாழும்போது சாதி மதங்களைப் பாராதவர், சொந்த பந்தங்களை சேர்க்காதவர் மகான் ஸ்ரீ சேசாத்திரி சுவாமிகள் இப்போதும் அப்படியே, ஆம் இது திக்கற்றவர்களின் திருக்கோவில். என்னைப் பற்றிக் கொள், நானே கரை சேர்க்கின்றேன் என்பது சேசவாக்கு.

அதிகாலை எழுந்து கொள், குளிக்க வேண்டுமென்ற அவசியம் இல்லை. வடதிசை நோக்கி உட்கார். சித்தாசனம் போடு. மூல மந்திரத்தை சொல்லி தியானம் செய். பின் உன் வேண்டுதல்களைச் சொல்லி முடி. தினம் இதைச் செய்.

தியானம் அன்னதானம் தவிர வேறு எதையும் கேட்காதவர் இவர். நான் கடன்காரன் அல்ல, காலணாவிற்கு கற்பூரம் ஏற்றினாலும் அதன் பயனை உடனே தந்துவிடுவேன் என்பது மகானின் வாக்கு.

இவரின் சமாதியில் வீசும் தெய்வீக நறுமணமே அதற்கு சான்று.

மகானை பணிவோம்!
மகத்துவம் பெறுவோம்!!

100% இயற்கையாக தயாரிக்கப்பட்ட சாய் ராஜயோகாவின் தயாரிப்புகள்



- ஆறுவகை பூக்களால் தயாரிக்கப்பட்ட ஹெர்பல் டீ
- 25 மூலிகைகளுடன் ஹேர் ஆயில்
- சீயக்காய் ஹேர் வாஷ் பவுடர்
- வேலம்பட்டை பற்பொடி
- வயிற்று நோய் தீர்க்கும் சுண்டவற்றல் பொடி
- அனைத்து நோய்களுக்கும் அமிர்த சூரணம்
- தோல் நோய் தீர்க்கும் குப்பைமேனி தைலம்
- 12 மூலிகைகளுடன் நிலவேம்பு குடிநீர்
- Snow சூப்பர்வாஷ் டிட்டெர்ஜெண்ட் லிக்விட்
- ஹேண்ட் மேக்கிங் குளியல் சோப்

மொத்தமாகவும், சில்லரையாகவும் வாங்க தொடர்பு கொள்ளவும்.

சாய் ராஜயோகா இயற்கை நலவாழ்வு மையம்

17/7 A, Palaniyappa 1st St, 1st Floor, Ayyanavaram, Chennai-23

9941816692, 8825831068

தொடர் –8:

குருவைத் தேடி

எனக்குள் இருந்து விழித்துக் கொண்டவன்தான் 'நான்' என்றாலும் அவனுக்கு அப்போது அவ்வளவாக அனுபவம் இல்லாததினால் அவனுடைய சிந்தனைகளும் செயல்களும் அவனுக்கு எதிராகவே திரும்பின. எங்கே சென்றாலும் மாற்றுக் கருத்துக்களும், எதிர்ப்புகளுமே கிடைத்தன.

கோயிலுக்குச் செல்லும் மனிதர்கள் கடவுள் அங்கிருந்து ஓடி போய் விடுவது போலவும்அதற்குள் அவரை பார்த்து விட வேண்டும் என்பது போலவும் முண்டியடித்துக்கொண்டு கூட்டத்திற்குள் இறங்குவதும் எதிர் வரிசையில் இருக்கும் பெண்களை ரசித்துவிட்டு இடையில்கடவுளைப் பார்த்து கும்பிடுபோடுவதும் தான் கொடுத்த அர்ச்சனை தட்டே தனக்கு வேண்டுமென்று அர்ச்சகரிடம் சண்டையிடுவதும், தேங்காய் ஏன் சரியாக உடையவில்லை என்று பேசி வசைபாடுவதும் மொத்தத்தில் இறைவனைத் தவிர மற்ற அனைத்து விசயங்களையும் ஆலயத்தில் அரங்கேற்றுவது எனக்கு பிடித்தம் இல்லாது போனது.

என் சுக துக்கங்களை இறைவனிடம் நேரடியாக சொல்ல முடியாதா? என்னை படைத்த இறைவனை நான் தொட்டு தடவி பார்க்க இயலாதா? பல நூற்றாண்டுகளாக என் தந்தைக்கும் எனக்கும் உண்டான தொடர்பு தடுக்கப்பட்டிருக்கிறதே! ஏன்?

நான் இறைவனுக்கு என்று கொடுப்பதெல்லாம் இறைவனுடையது அல்லவா? அவனுடையதை எடுத்து



அவனுக்கே கொடுப்பதனால் அவன் யார், நான் யார் கொடுக்கப்படும் பொருள் யாது, அப்படியே கொடுத்தால் என்னையே கொடுப்பதை விட வேறு சிறந்த பொருள் இவ்வுலகில் உண்டோ?

இவ்விதம் பலவாறாக எனக்கு சிந்தனையை தூண்டி வைத்த கொல்லாமை குறள் தந்த தெய்வப்புலவர் பாதம் பணிகிறேன். மாலை 4 மணிக்கு எங்கள் வீட்டிற்கு சோதிடர் வருகிறார் சோதிடம் பார்ப்பதற்காக. அந்நாளில் சோதிடர்கள் வீடு தேடி வருவர். இன்று நாம் சோதிடர்களை தேடி ஓடுகிறோம்.

சோதிடர் என் ராசிக்கு எப்போதும் உயர்வாய் பலன் கூறுவார். அதை கேட்க எனக்கு ஆவலாய், கர்வமாய் இருக்கும்.

எனவே பள்ளியிலிருந்து விரைவாய் திரும்பிவிட வேண்டும் என முடிவெடுத்து புறப்பட்டேன். அது என் படிப்பின் இறுதி வருடம்? ஒன்பதாம் வகுப்புடன் என் கல்விக் கண் மூடிக்கொண்டது.

வகுப்பு ஆசிரியர் இன்று நமது பள்ளிக்கு தத்துவஞானி வேதாத்திரி மகரிஷி அவர்கள் வருகை தர இருக்கின்றார்கள். அவர் உங்களுக்கு நல்ல உடற்பயிற்சிகளையும் மனப் பயிற்சிகளையும் கற்றுக் கொடுப்பார். அது சமயம் அனைத்து மாணவர்களும் ஒழுக்கமுடன் நடந்து நம் பள்ளியின் நற்பெயரை காப்பாற்ற வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

பள்ளி முடிந்து வீடு செல்லாமல் வெறுப்போடு ஒன்பதாம் வகுப்பிலிருந்து 12ஆம் வகுப்பு மாணவர்கள் வரை காத்திருந்தோம். பெரியவர் வந்தார், ஏதேதோ பேசினார்... கைகால்களை அசைக்க சொன்னார் யாருக்கு என்ன புரிந்தது என்று தெரியவில்லை, ஆனால் அவரின் தோற்றம் எனக்கு மிகவும் பிடித்திருந்தது.

வரிசையில் நின்று இனிப்பும் அவரின் புகைப்படமும் வாங்கி போகச் சொன்னார்கள். எனக்கு மனமெல்லாம் சோதிடம் கேட்பதிலேயே இருந்தது. எனவே எனது பள்ளியின் பின்புறம் வழியாக வெளியேறினேன்.

புத்தக மூட்டையை தோளில் போட்டுக்கொண்டு விரைந்த போது எதிர்பாராத வண்ணம் ஒரு முதியவர் மேல் மோதிவிட்டேன். கோபமான அவர் எங்கடா போற, சாகுறத்துக்கா என்றார். ஆமா என்றபடி அவரைத் தாண்டி ஓடினேன். அவரும் நீண்ட தாடியுடன் வேதாந்திரி மகரிஷி போலவே இருந்தார்.

நல்ல வேளை சோதிடர் அப்போதுதான் வந்திருந்தார். என் சாதகத்தை ஆராய்தவர், முரடன். ஆனால் நல்லவன், நிறைய படிப்பான், அரசாங்க உத்தியோகம் கண்டிப்பாக உண்டு என்றெல்லாம் கூற எனக்கு இறக்கை முளைத்தது.

எனது எதிர்கால வாழ்க்கை சோதிடரிடம் அடகு வைக்கப்பட்டது. கடவுள் மேல் நமக்கு நம்பிக்கை இருக்கின்றது, மறுப்பதற்கில்லை. பின் ஏன் நம்மில் ஒருவரான சோதிடரின் மீது நம்மையும், நம் எதிர்காலத்தை, அடகு வைக்கின்றோம் என்ற கேள்வியும் எழுந்தது. இறைவனைப் பற்றிய புரிதல் இல்லாததே என்று அப்போது விளங்காது போனது.

அடுத்து வந்த மூன்று மாதங்களுக்குள் நான் தேர்வில் தோல்வியுற்று என்னுடைய முதல் குருவும்

முதலாளியுமான திரு.புக்ராஜ் அவர்களிடம் வேலைக்கு சேர்ந்து விட்டேன். ஞாயிறு விடுமுறை நானும் நண்பர்களும் ஊர் சுற்றிக் கொண்டிருந்தோம்.

நகரின் பிரதான பள்ளி மைதானத்தில் யாரோ ஒருவர் சொற்பொழிவாற்றி கொண்டி ருந்தார். வெளியில் உள்ள விளம்பரத் தட்டியை கவனியாது உள்ளே புகுந்தோம். மேடையில் யோகிராஜ் வேதாத்திரி மகரிஷி அவர்கள் சொற்பொழிவாற்றிக் கொண்டிருந்தார்.

14 வயதில் அவருடைய பேச்சு எனக்கு சுத்தமாக புரியவில்லை. எனவே நண்பர்களை கூட்டிக் கொண்டு விரைவாய் கூட்டத்தை விட்டு வெளியேறினேன்.

- (தொடரும்..)



நீ செய்வது எதுவாயினும், எங்கு இருப்பினும், எப்போதும் இதை நினைவில் வை.உனது ஒவ்வொரு செயலையும் நான் அறிவேன். எனது பார்வை என்னை நேசிப்பவர்கள் மீது எப்போதும் இருக்கும்.



ஒருவன் எப்போதும் என்னையே தியானம் செய்து, என்பெயரையே உச்சரித்துக் கொண்டு, என் லீலைகளை பாடிக் கொண்டு, இவ்வாறாக நானாகவே மாறி விடுவானாகில் ,

அவனது கர்மா அழிகிறது. எப்போதும் நான் அவன் அருகிலேயே இருப்பேன்.

என் பக்தர்களுக்கு தீங்கு நேர விட மாட்டேன். என் பக்தர்களை நானே கவனித்துக் கொள்ள வேண்டும். ஒருபக்தன் விழும் நிலையில் இருந்தால்,நான் நான்கு,நான்கு கரங்களை நீட்டி காக்கின்றேன் .அவனை விழ விட மாட்டேன்.

என் சொற்களால் பூரண நம்பிக்கை வை.உன் இலட்சியம் நிறைவேறி விடும்.

மகாசமாதிக்குப் பின்னரும், நீ நினைத்த மாத்திரத்தில், நீ எங்கிருந்தாலும்,நான் உன்னுடன் இருப்பேன். பயணம் செய்ய எனக்கு புகைவண்டி எதுவும் தேவையில்லை.

சாய் ராஜ யோகா

இயற்கை நலவாழ்வு மையம்

யோகா, பிராணாயாமம், தியானம், யோகா தெரபி



உடலும் உள்ளமும் ஆரோக்கியத்துடன் ஆனந்தமாய் வாழ அனைவருக்கும் எளிய மூச்சுப் பயிற்சி, ஆசனப் பயிற்சி, தியானப் பயிற்சி,குண்டலினி யோகி ஸ்ரீராம சாது அவர்களின்

குறுகிய கால பயிற்சி வகுப்புகள்

சாய் ராஜ யோகாவின் ஆனந்த கிரியா 1 நாள் பயிற்சி

(வயிறு சம்பந்தப்பட்ட பிரட்சனைகள், கொழுப்புக் கட்டி, நீர்க்கட்டி, மாதவிடாய், குழந்தையின்மை, செரியாமை, சுறுசுறுப்பின்மை, மலச்சிக்கல், சளி தொந்தரவு, ஆஸ்துமா, வீசிங், மனசோர்வு, மூட்டுவலி, உடல்வலி ஞாபகமறதி நீங்கும் அற்புதப் பயிற்சி)

எளிய முறை யோக ஆசனப் பயிற்சி 2 நாள் பயிற்சி

(நீரிழிவு, முதுகுவலி, உடல் பருமன், இதயநோய், ஒற்றை தலைவலி, ஆண்மைக்குறைவு, தூக்கமின்மை, மன அழுத்தம், ரத்த அழுத்தம், கண் நோய் தீர ஆசனப் பயிற்சி)

தன்னை உணர குண்டலினி யோக தியானம் 8 நாள் பயிற்சி

(வாழ்க்கை வளத்தை, உடல் நலத்தை சரி செய்யும் யோகசக்கரங்கள், குண்டலினியின் இருப்பு, ஏறுபடி, இறங்குபடி, குண்டலினி யோகத்தின் மூலம் ஆத்மஞானம், பிரம்ம ஞானம் அடைவது இல்லற இன்பங்களை குறைவின்றி அனுபிவித்து இறையுணர்வோடு வாழ்தலைப் பற்றி ஞானம்)

மாதம் தோறும் முதல் ஞாயிற்றுக்கிழமை மௌனம், பயிற்சி நிகழும். அனைத்துப் பயிற்சிகளுக்கும், கட்டணங்களுக்கும் தொலைபேசியில் தொடர்பு கொண்டு விபரம் அறியவும்.

No: 17/7 -A, Palaniyappa 1st St, 1st Floor, Ayyanavaram, Chennai-23

9941816692, 8825831068



மூட்டு வலிகளை குறைக்கும் இயற்கை வழிகள்

வலிகள் பலவிதம். ஒவ்வொன்றும் ஒரு விதம். சில வலிகள் தாங்கிக் கொள்ள கூடியதாக இருக்கும். சில பொறுக்க முடியாத அளவில் இருக்கும். சில வலிகள் உயிரையே போக்கும்.

இந்த வலிகளுக்கு காரணம் நம் உடம்பில் கழிவுப் பொருட்களின் தேக்கமே. மலம், சிறுநீர், வியர்வை,சளி, அபானவாயு முதலிய கழிவுப் பொருட்கள் நம் உடம்பிலிருந்து அவ்வப்போது வெளியேறிக் கொண்டே இருக்க வேண்டும்.

நன்றாக மென்று சாப்பிடாததாலும், ஒத்துக் கொள்ள்ளாத உணவை உண்பதாலும் அதிகமாக உண்பதாலும், சாப்பாடின் இடையிடையே தண்ணீர் குடிப்பதாலும்அஜீரணம் உண்டாகிறது. அதனால் உணவுப் பொருள்கள் வயிற்றில் புளித்து, வாயு உற்பத்தியாகிறது. இந்த வாயு ஆசன வாய் வழியாகதான் வெளியேற வேண்டும்.

மலச்சிக்கலால் இந்த வாயு வெளி யேற முடியாமல் மூட்டுக்கள் தசைப் பகுதிகளில் தங்கி அங்கிருந்து வெளியேற முயற்சிக்கிறது. அதுவே நமக்கு வலியாகத் தோன்றுகிறது. அடிவயிற்றில் தோன்றும் வெப்பம் தலை வலியாகவும், வயிற்று வலியாகவும் மாறிவிடும்.

இம்மாதிரியான வலிகள் வராமல் காக்க நமக்கு ஒத்துக் கொள்ளும் உணவை நன்றாக மென்று உண்ண வேண்டும். சாப்பாட்டின் இடையே நீர் அருந்தக் கூடாது. மலச்சிக்கல் இல்லாது பார்த்துக் கொள்ள வேண்டும். வந்துவிட்ட வலிகளை நீக்க சில இயற்கை வழிகளைகாண்போம்.

மூட்டுவலிக்கு: புளிப்பு, துவர்ப்பு, குளிர்ச்சி மிகுந்த உணவு வகைகளை குறைத்துக் கொள்ள வேண்டும். அடிக்கடி கேரட் சாப்பிட மூட்டு வலி தீரும். இஞ்சி பூண்டு, புதினா, சின்ன வெங்காயம் ஆகியவற்றை உணவில் அதிகம் சேர்த்துக் கொள்ள வேண்டும். மூட்டுவலிக்கு கருணைக்கிழங்கு ஓர் வரப்பிரசாதம்.

முடக்கத்தான் கீரை, வாதநாராயணன் கீரைகளை தொடர்ந்து சாப்பிடுவதை வழக்கமாக்கிக் கொள்ள

வேண்டும். வாரத்திற்கு 2 நாட்கள் பிரண்டை துவையல் சாப்பிடுவது மூட்டு வலிக்கு மிகச்சிறந்தது.

உணவு விசயத்தைப் பொறுத்த வரை பச்சரிசிக்குப் பதில் புழுங் கல் அரிசிக்கு மாறிவிட்டால் மூட்டு ஒழுங்காக இயங்கும். ஆசனங்களில் பவன முக்தாசனமும், திரிகோணாசனமும் மூட்டு வலிக்கான ஆசனங்கள்.

உபத்திரவம் கொடுக்கும் மூட்டு பகுதிகளில் தேங்காய் எண்ணெய் அல்லது நல்லெண்ணெய் தடவி சூரிய வெளிச்சத்தில் காட்டினால் வலி குறையும். முருங்கைகீரை, கறிவேப்பில்லை அதிகம் சேர்த்துக் கொள்ளவும்

மூட்டு தேய்வு நோய் உள்ளவர் களுக்கு இஞ்சி ஓர் மாமருந்து இஞ்சி சாற்றை சிறிதளவு அருந்தி வர வலி நிவாரணி மாத்திரைகள் எடுத்துக் கொள்வதால் எவ்வளவு வலி குறை கிறதோ அந்த அளவு வலி குறையும். பக்கவிளைவுகள் இல்லை. இஞ்சியில் உள்ள ரசாயனப் பொருட்கள் இரத்தக் குழாய்களை விரி வடையச் செய்து இரத்த ஓட்டத்தை அதிகரிக்கின்றன.

ஆகையால் பாதிக்கப்பட்ட மூட்டு பகுதிகளில் தேங்கியிருக்கும் நச்சுப் பொருட்கள் வெளியேற்றப்பட்டு வலி வீக்கம் கணிசமாக குறையும், ரத்தவோட்டம் அதிகரிப்பதால் தேய்ந்த எழும்புகளும், திசுக்களும் மீண்டும் வளரத் தொடங்குகின்றன.

கரையான் புற்றுமண் (அ) களி மண்ணை பிசைந்து குழைத்து வலியுள்ள இடத்தில் ஒரு செண்டி மீட்டர் கணத்தில் பற்றுப் போட் டாலும் வலி குறையும். இவை அனுபவ உண்மை. இயற்கை முறைகளை சோம்பேறித்தனமின்றி பின்பற்றினால் மிக விரைவில் நோய் அகன்று குணம் பெறலாம்.

விளம்பரங்கள் வரவேற்கப்படுகின்றன

அன்பான சாயி சொந்தங்களே...உங்களது நிறுவனங்கள், கடைகள், தொடர்பான விளம்பரங்களை பிரசுரித்து பயனடையலாம்.




முழுபக்க விளம்பரம் கறுப்பு / வெள்ளை ரூ.2000

அரைபக்க விளம்பரம் கறுப்பு / வெள்ளை ரூ.1000

முன் பின் அட்டை உள்பக்கம் கலர் ரூ.3000

பின் அட்டை கலர் ரூ.4000

சாயி ராச்சியம் தழைக்கிறது



பாபா தம் இளமைக் காலத்தில் தான் தங்கிவந்த மசூதியில் தினந்தோறும் விளக்கேற்றி வைப்பது வழக்கம். ஆலயங்களில் தீபம் ஏற்றுவது என்பது இந்துக்கள், முகம்மதியர்கள் யாவருக்கும் பொதுவான பழக்கம். கிருஸ்துவர்களும், மெழுகுவர்த்தி ஏற்றி வைக்கின்றார்கள் அல்லவா?

மசூதியில் உள்ள விளக்குகளுக்கு தேவையான எண்ணெயை தினந்தோறும் அருகில் உள்ள இரண்டு வாணியர்களும், ஒரு செக்கு ஆட்டுபவனும் பாபாவிற்கு கொடுத்து வந்தனர். ஒருவர் மிகவும் சாதுவாகவும், அடுத்தவரின் கண்களுக்கு பித்து பிடித்தவர் போன்று காணப்பட்டால் அவரைவிட தாம் மேம்பட்டவர் என்ற எண்ணத்துடன் அவர்களை துன்பப்படுத்தி சந்தோசப்

படுவது சாதாரண மனிதர்களின் இயல்பு. அதுபோலவே தொடர்ந்து பாபாவிற்கு எண்ணெய் கொடுத்து வந்தவர்கள் ஒருநாள் கூடிப் பேசி, இந்த பைத்தியத்திற்கு நாம் ஏன் என்னெய் கொடுக்க வேண்டும்.

இன்று முதல் நாம் அவனுக்கு எண்ணெய் கொடுக்க கூடாது என பேசி வைத்துக் கொண்டு பாபாவிடம் எண்ணெய் இல்லை என்று கைவிரித்து விட்டனர். பாபாவோ மறுவார்த்தை ஏதும் கூறாமல் திரும்பி விட்டார். ஏற்கனவே இருட்டி விட்டது. இருளில் விளக்கில்லாமல் இந்த பக்கிரி என்ன செய்ய போகிறது என்று வேடிக்கை காண எண்ணெய் வியாபாரிகள் பாபாவை பின் தொடர்ந்தனர்.

மசூதிக்கு சென்ற பாபா எண்ணெய் வாங்கும் தகர டப்பாவில் தண்ணீரை ஊற்றி நன்றாக கலக்கி தன் வாயில் இட்டு குடித்தார். அதன் பின்பு அடுத்த குவளை நீரை மொண்டு விளக்கினில் நிரப்பி அதில் திரியை வைத்து விளக்குகளை ஏற்றலானார்.

இந்த பைத்தியத்தைப் பார், நீரை ஊற்றி விளக்கேற்றுகிறது. நீரில் விளக்கு எரியுமா... என்று கேலியாக சிரித்தனர் வியாபாரிகள். ஆனால் அங்கே நடந்ததோ வேறு. நீரை விட்டு ஏற்றிய விளக்குகள் நன்றாக எரிய ஆரம்பித்து ஒளியை வீசின.

ஓ... என்ன தவறு செய்து விட்டோம். இவன் பைத்தியம் அல்ல, பெரிய சித்தராகத்தான் இருக்க வேண்டும் என்றுணர்ந்த வாணியர்கள், எங்கே தங்களை சபித்து விடுவாரோ என்று பயந்து, பாபாவிடம் ஓடிவந்து பணிந்து தாங்கள் செய்த குற்றத்திற்காக மன்னிக்க வேண்டினர்.

பாபா இதை எதிர்பார்க்கவிலை., எண்ணெய் இல்லை என்றாகிவிட்டது. எப்படியாவது விளக்கு எரிந்தாக வேண்டும் என்பதற்காகவே பாபா இந்த அதிசயத்தை செய்தாரே ஒழிய தன்னை விளம்பரப்படுத்திக் கொள்ள வேண்டுமென்றோ தன் பெருமையை, தம்மிடம் உள்ள சக்திகளை, பிறர் அறிந்து தம்மை கொண்டாட வேண்டும் என்றோ செய்தாரில்லை.

அன்று முதல் இன்று வரை பாபா செய்துவரும் அதிசயங்கள் அனைத்தும் அகங்காரமற்றவை. உலக நன்மைக்காகவும், பக்தர்களுடைய நலனையுமே முன்னிட்டு செய்யப்பட்டவையாகும். தவிர தன் சுயலாபத்திற்காக பலவித சித்து வேலைகளை பலர் செய்து வருகின்றனர். அவற்றைக் கண்டு நாம் மயங்க வேண்டியதில்லை. அவற்றால் நிச்சயமாக நமக்கு எந்தவிதமான பலனும் கிட்டாது.

தவறை உணர்ந்து பணிந்த வாணிபர்களைப் பார்த்து பாபா பிறர் கஷ்டப்படுவதைப் பார்த்து ஆனந்தப்படுவது பெருங்குற்றம். தன்குழந்தை கஷ்டப்படுவதை கண்டு மற்றவர்கள் ஆனந்தப்படுவதை கண்ட தாய் எப்படி வருந்துவாளோ, அவ்வாறே கடவுளும் வருந்துவார். சிரமப்படுபவர்களுக்கு உதவி செய்வதே கடவுளை சந்தோசப்படுத்தும் என்று கூறினார்.

இச்சம்பவம் கிராமம் முழுவதும் பரவி, ஓரிருவர் தவிர பாபாவை ஒரு பொருட்டாக நினைக்காதவர்கள் கூட பாபாவை சித்தர் மகான், அவதார புருஷர், அவுலியா என்றெல்லாம் கூறி மதிக்கத் தொடங்கினர். அதிலிருந்தே சயி ராச்சியம் துவங்கியது.

சற்குரு சாயிநாதனை காண எங்கள் குருவுடன் சீரடி யாத்திரை



சென்ற 2015ம் ஆண்டு சூன் மாதம் முதல் எங்கள் ஸ்ரீசாய்ராம் ஆத்ம ஞான சபை உறுப்பினர்கள் அனைவரும் எங்கள் குருநாதருடன் வருடந்தோறும் சீரடி யாத்திரை சென்று சாயிநாதரை தரிசித்து வருகின்றோம்.

வருடத்திற்கு ஒருமுறை எங்கள் குழுவினர் 40 பேரும் ஒரே குடும்பமாய் சீரடி சென்று வரும் ஆனந்தத்தை வார்த்தைகளில் கூற முடியாது. அதை அனுபவித்தால்தான் தெரியும். வரும் 2019 சனவரி 17ம் தேதி எங்கள் குழுவினர் 6 நாட்கள் யாத்திரையாக சீரடி சென்று பாபாவை தரிசிக்க இருக்கின்றோம்.

சிறு குழந்தைகளைப் போன்று சனவரி 17 எப்போது வரும் என்று நாட்களை எண்ணிக் கொண்டிருக்கின்றோம். அதுவும் எங்கள் குருவுடன் சென்று சற்குருவை தரிசிப்பது எங்களுக்கு மிகுந்த ஆனந்தத்தையும், உற்சாகத்தையும் தரும். ஏன் என்றால் அவரும் ஓர் யாத்திரீகரைப் போல் கலந்து கொள்வார்.

தவிர யாத்திரை நாட்கள் முழுவதும் கிடைக்கும் நேரங்கள் எல்லாம்





– ஜெயந்தி ஸ்ரீராம்

சத்சங்கம், யோகா, தியானம், சித்த மருத்துவம், பற்றிய பயிற்சிகளும், கலந்துரையாடல்களும் நடந்து கொண்டே இருக்கும்.

தங்குவதற்கு, பாதுகாப்பான நல்ல விசாலமான 3 நட்சத்திர தங்குமிடம் போல இருக்கும் சாய் ஆஸ்ரமத்தில் தங்கி அங்கிருந்து ஆனந்தமாக குதூகலத்துடன் நடந்து சென்று சாயியை தரிசிப்பது புதிய அனுபவமாக இருக்கும்.



எங்கள் குருநாதருடன் சாயியை தரிசிக்கும்போது நடக்கும் ஆச்சரிய சந்தர்ப்பங்களை அனுபவித்தால் மட்டுமே விளங்கிக் கொள்ள முடியும்.

பயணத்தின் ஆரம்பத்தில் புதிய புதிய உறுப்பினர்கள் எல்லாம் வருவார்கள். பயண முடிவின்போது எங்களை விட்டு பிரிய மனமில்லாதது போல், அனைவரும் ஒரே குடும்பமாக இணைந்திருப்பார்கள்.

அதற்கு காரணம் ஆறு நாட்கள் யாத்திரையில் சற்குரு சாயி நாதனை பற்றி எங்கள் குரு பக்தர்களுக்கு ஓரளவிற்காவது உணர்ந்திருப்பார்கள். ஆகையால் நாங்கள் அனைவரும் சாயி குடும்பம் ஆகியிருப்போம்.

அந்த ஆனந்த அனுபவத்தை நீங்களும் அனுபவிக்க வேண்டும் என்றால் எங்களுடன் தொடர்பு கொள்க. அடுத்த சீரடி புனித யாத்திரை **மே.1** விபரமறிய தொடர்பு கொள்ளவும்.

ஸ்ரீ சாய்ராம்
ஆத்மஞான சபை, 17/7ஏ.
பழனியப்பா முதல் தெரு,
முதல்மாடி, அயனாவரம்,
சென்னை – 600 023.
தொலைபேசி: 99418 16692,
88258 31068.

தொடர்: 8

மவுனம்



ஆயிரம் போர்களில் வென்றவனை விட தன்னைத் தானே வென்றவனே பெரிய மாவீரணாவான் என்கிறார் மகாவீரர். ஆசையே துன்பத்திற்கு காரணம் என்கிறார் புத்தர்.

தன்னை வெல்ல வேண்டுமாயின். 'ஈசனோடாயினும் ஆசை அனுமின்' என்கிறார் திருமூலர். நேர்மையான மனப்பதிவுகளால் ஆசையை துறக்க வேண்டும். ஒருவன் தன் ஆன்மாவை உயர்ந்த நிலைக்கு கொண்டு வர வேண்டும் என்றால் ஆசைகளை களைய வேண்டும். ஆசைகளை களைவதற்கு மவுனமே மிகச்சிறந்த சாதனம்.

மவுனம் எப்படி இருப்பது அல்லது எப்படி உணர்வது, இல்லை எனில் எங்கே சென்று மவுனத்தை அடைவது, எங்கேயும் செல்ல வேண்டாம். முதலில் மவுனத்தின் இருப்பிடம் நம் மனமே என்பதை உணர்ந்து கொள்ளுங்கள்.

மனசுக்கு அமைதியே இல்லை என்று கூறுகின்றோம். இப்போது இல்லை என்றால், ஏற்கனவே அமைதி இருந்திருக்கிறது என்றுதானே பொருள். புற உலக ஏக்கங்களால் நாம்தான் நமது அமைதியை வெளியேற்றி இருக்கின்றோம்.

இப்போது அமைதியை கொண்டு வருவதற்காக என்ன செய்ய வேண்டும்?

என்ன கேள்வி இது?

நீங்கள் மன அமைதியை இழப் பதற்கு என்ன செய்தீர்கள்.

புற உலக பொருட்களின் மீது நாட்டம் கொண்டேன். அடுத்தவரின் தனிப்பட்ட விசயங்களில் கவனம் செலுத்தினேன். தேவையில்லாத பேச்சு, ஆசையை வளர்த்துக் கொண்டேன். இறைவனை தொழ மறந்தேன். இரவு நேர கொண் டாட்டங்களில் மனம் செலுத்தினேன். மற்ற உயிர்களின் மீது இரக்கம் கொள்ள மறந்தேன்.

நான் யார் என்பதை தேட மறந்து, நீ யார் எனக்கேட்டுத் திரிந்தேன். இவ்வுலக வாழ்வு மாயை என்பதை எண்ணிப் பார்க்கவே தயங்கினேன். அமைதி என்னை விட்டு விலகியது.

மிகவும் சரி, இவை எல்லாம் உங் களுக்குள் வெளியில் இருந்து வந்தது. ஆகவே உங்களின் இயற்கை குணமாகிய மவுனம் உங்களை விட்டு வெளியேறியது. மீண்டும் மவுனம் உங்களுக்குள் குடியேற வேண்டுமென்றால், ஏற்கனவே குடியிருப் பவைகளை வெளியேற்றுங்கள். எல்லாம் சரியாகிவிடும்.

அவ்வளவு எளிதா என்ன?

மன அமைதியின்றி நீங்கள் பட்ட பாட்டிற்கு இது மிகவும் எளிதுதான்.

இந்த இடத்தில் படிப்பதை சற்று நிறுத்திவிட்டு மவுனமாய் இருந்து யோசி யுங்கள். உங்களுக்கே புரியும்.

நமது ஆனந்தத்தை உலக பற்றுகள் என்ற அசைவு மறைந்திருக்கின்றது. அவைகளை நிறுத்துங்கள் ஆனந்தம் தெரியும்.

உங்கள் மனம் அமைதியின்றி தவிக்கும்போது, மவுனத்தில் இருந்து கொண்டு, நான் உடலும் அல்ல, மனமும் அல்ல, அழிவற்ற ஆன்மாவே நான்.

நானே உண்மை பேரறிவு, நானே பேரின்பம், என்பதை நினைவில் கொள்க. மன வாட்டத்தை நீக்கிக் கொள்க. அது மேகம்போல் வரும், விலகி விடும். நான் இன்பம் நிறைந்தவன். ஆனந்தமயமானவன். இயல்பானவன் எனக் கருதுக. நீங்கள் அவையின்றி வேறல்ல, உங்களுடைய உண்மையான இயல்பை உணருங்கள்.

ஓ... நான் பாவி, நான் அழிப்பவன். எனக்கு எதுவுமே நன்மை நடக்காது. என்று எண்ண வேண்டாம். நீங்கள் இவ்வாறாக சிந்தித்தால் அவ்வாறாகவே மாறி விடுவீர்கள். உயர்ந்தவர் என்று நினைத்தால் உயர்ந்தவராவீர்.

தாழ்ந்தவர் என்று நினைத்தால் தாழ்ந்தவராவீர். எதிர்மறை எண்ணங்க ளுக்கு இடமளிக்காதீர். எப்பொழுதும் நேரான, நேர்மையான, உண்மையான, எண்னங்களையே எண்ணுக.

தங்கத்தைத் தேடிச் செல்பவர்கள் டன் கணக்கில் கற்களைச் சேகரிப்பார்கள். ஆனால் வெறும் கற்களை தூர எறிந்து விட்டு தங்கம் இருக்கும் கற்களை சுத்தம் செய்து அவைகளில் இருந்து சிறிதளவு பொன்னை எடுப்பார்கள்.

உங்களுக்குள்ளே இருக்கும் பொன்னை மறந்து விடாதீர்கள். அழுக் கும், தூசியும் நிறைய படிந்திருக்கும். அவைகளைத் துடைத்துச் சுத்தம் செய்க. நீங்கள் தேடும் பொன்னில் கவனத்தை செலுத்துங்கள்.

ஆழ்ந்த அமைதி என்னும் மவுனமே நாம் தேடும் செல்வமாக இருக்கட்டும். அதுவே இறுதியானது. அழிவற்றது. ஆற்றல்மிக்கது.

– (தொடரும்...)

பக்தி

திருமதி.ஜெயந்தி முரளி

எனது பெயர் ஜெயந்தி முரளி. நான் சென்னை சைதாப்பேட்டையில் வசித்து வருகிறேன். எங்கள் குடும்பத்தினர் அனைவரும் சீரடி சாயெ்பாபாவின் பக்தர்களே. எங்கள் அனைவருக்கும் பாபாவை மிகவும் பிடிக்கும். பாபா எங்கள் வாழ்க்கையில் நிகழ்த்திய அதிசயங்களுக்கு அளவே இல்லை.

எதைக் கூறுவது, எதை விடுவது என்றே தெரியவில்லை. மொத்தத்தில் எங்கள் வாழ்க்கையின் ஒவ்வொரு நொடியும் பாபாவின் ஆதிக்கமே, அதிசயமே, பாபாவை மனதிற்குள் வைத்துக் கொண்டு ஆனந்தத்துடன் வாழ்ந்து வருகிறோம்.




2001ஆம் ஆண்டு எனக்கு என் பெற்றோர்கள் திருமணம் நிச்சயித்தார்கள். அதில் ஒரு பிரச்சனை வந்தது. நல்ல முகூர்த்தம் அமைந்தால், நல்ல மண்டபம் கிடைக்கவில்லை. மண்டபம் கிடைத்தால் நல்ல முகூர்த்தம் கிடைக்கவில்லை. நாட்கள் வேறு நெருங்கிக் கொண்டிருந்தது.

எங்கள் குடும்பத்தினர் அனைவரும் பாபாவிடம் முறையிட்டோம். பாபாவே எங்களுக்கு நாளும் குறித்து மண்டபமும் பிடித்துக் கொடுத்தார். அதில் மிகப் பெரிய ஆனந்தம் என்னவென்றால் எங்களது (ஜெயந்தி - முரளி) திருமணம் 26.10.2001 விஜயதசமி நாளில் நடந்தது. இது பாபாவால் நிச்சயிக்கப்பட்ட திருமணம் என்பதற்கு வேறு சாட்சியா வேண்டும்.

திருமணம் முடிந்து ஒரு ஆண்டு ஆகியது.

லீலாமிர்தம்

குழந்தைக்காக பாபாவிடம் மனமுருக வேண்டினேன். கேட்டதை எல்லாம் தரும் கற்பகத் தரு பாபா இருக்க கவலை ஏன்? அடுத்த மாதமே கரு தங்கியது. 15.10.2003ல் எங்களுக்கு ஒரு ஆண் வாரிசை பாபா வழங்கினார். விசால் என்ற எங்களது அன்பு மகன் தற்போது 10வது படித்துக் கொண்டிருக்கிறான்.



இதில் என்ன ஆச்சர்யம் என்றால் எங்களது திருமணம் எப்படி 15.10.2001 விஜயத சமியில் நடந்ததோ அதேபோன்று 15.10.2003 விஜயதசமி என்று எங்கள் மகன் பிறந்தான். சொல்லவா வேண்டும். பாபாவின் மேல் உள்ள பக்தியும், பற்றும், மிக அதிகமாக மாறியது அடுத்த வருடமே சர்வாணி என்ற மகளும் பிறந்தாள். ஒன்பதாம் வகுப்பு படிக்கின்றாள்.

எனதுகணவர் திரு.கே.வி.முரளி அவர்கள் எல்.ஐ.சி.யில் வளர்ச்சி அதிகாரியாக பணியாற்றி வருகிறார். அவரும் தீவிர பாபாவின் பக்தர். அவர் 1997ல் இருந்து பாபாவின் மேல் பக்தி செலுத்தி வருகின்றார். எங்களது திருமணத்திற்குப் பிறகு எனது கணவர்தான் முதன் முதலில் 2006ல் சீரடிக்கு அழைத்துச் சென்றார்.

அடிக்கடி நேரம் கிடைக்கும் பொழுதெல்லாம் மயிலாப்பூர் பாபா கோவிலுக்குச் சென்று பாபாவை தரிசித்து வருவதை வழக்கமாக வைத்திருக்கின்றோம்.

எங்களது வீட்டின் எதிரில் ஒரு விநாயகர் கோவில் உள்ளது. அங்கே சிவலிங்கம் பிரதிட்டை செய்ய வேண்டும் என்று எனது மனதில்



தோன்றிக் கொண்டே இருந்தது. எனது கணவரிடத்தில் இதனை கூறி ஆலோசித்தேன். அவரும் சரி என்று ஒத்துக் கொண்டார்.

பாபாவிடம் உத்தரவு கேட்க பாபாவும் அனுமதி அளித்தார். அதன்படி வேலையை ஆரம்பித்து சிவலிங்கம் வாங்க சிலரிடம் விசாரித்தோம். அப்போது சாயிசேவகர் திரு.மாதவராஜ் அவர்களிடமும் ஆலோசனை கேட்டேன். அவரின் வழிகாட்டுதலின்படி மாமல்லபுரம் சென்று சிவலிங்கம், நந்தி, வாங்கி வந்து பிரதிட்டைக்கு வேண்டிய அனைத்து ஏற்பாடுகளையும் செய்தோம்.

சிவனடியார்களின் உபதேசப்படி சிவலிங்கத்திற்கு ஸ்ரீ வேதபுரீஸ்வரர் என்ற பெயர் வைக்கப்பட்டு 11.12.2018 இரவு யாகமும் 12.12.2018ல் சிலை பிரதிட்டையும் செய் வித்து மிகச்சிறப்பாக குடமுழுக்கு நடத்தி முடித்தோம். அனைத்தையும் பாபா மிகச் சிறப்பாக நடத்திக் கொடுத்தார்.

மதியம் அன்னதானமும் வழங்கினோம். எனது எண்ணங்களையும் ஆசைகளையும் நிறைவேற்றுவதற்காக மனம் நோகாமல் விழாவிற்க்குண்டான அனைத்து செலவுகளையும் செய்த கணவருக்கும், ஒத்துழைப்பு கொடுத்து அவருடன் இணைந்து பணியாற்றிய சிவனடியார்களுக்கும், அன்பர்களுக்கும் பக்தர்களுக்கும், என் மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொண்டு எல்லோரும் எல்லாமும் பெற பாபாவை பணிகின்றேன்.

ஓம் சாய்ராம்.



P.Sivasaravanan B.E.,
98434 40806

Authorised Distributor
GS Caltex

ELITE ENTERPRISES
(Automobile & Industrial Lubricants)

Authorised Dealer
Castrol



Products

- Automobile Engione Oils
- Hydraulic Oils
- Gear Oils
- Compressor Oils
- Cutting Oils
- Greases-Industrial
- Greases-Automobile
- Brake Oil
- Coolant Oil

SF:610, Shop-D,
Sri Lakshmi Complex,
Thoppampatti Pirivu,
MTP Road, Coimbatore - 641 017.
Email: sivasaravanan@gmail.com

தொடர்: 8

வந்தார் சாயி...

– ஸ்ரீராம்

முன்கதை: (தன் குருவின் மறைவிற்குப் பின் தனது பதினாறாவது வயதில் சீரடிக்கு வந்த பாபு அங்கே சில அன்பர்களையும், நண்பர்களையும் பெற்றான். கங்கா பாயும், பய்ஜா பாயும் அவனுக்கு உணவு கொடுத்து உபசரித்தனர்.)

மறுநாள் காலையில் உணவு கூடையுடன் பாபுவை தேடிவந்தாள் பைஜா. ஆனால் மரத்தடியில் பாபுவை காணோம். மனம் சங்கடத்தில் ஆழ்ந்தது. சற்று முற்றும் தேடினாள். கண்ணுக்கு எட்டிய தூரம் வரை பாபுவை காணவில்லை. கால்கள் தானாக காட்டை நோக்கி நகர்ந்தது. கொஞ்சமும் பயமில்லாது உணவுக் கூடையுடன் காட்டிற்குள் சென்று பாபுவை தேடினாள்.

குழந்தாய் குழந்தாய் என்றுகுரல் கொடுத்துக்கொண்டே வெகு தூரத்திற்கு வந்து விட்டாள். இனி வேலைக்கு ஆகாது திரும்பிச் செல்லலாம் என எண்ணியபோது கண்டுவிட்டாள். அதோ அந்த மரத்தடியில் ஆழ்ந்த யோகத்தில் ஆந்திருந்தான் பாபு.

அருகில் சென்று அமர்ந்தால்ள். உணவு கூடையை அவன் முன் வைத்து காத்திருந்தாள். சற்று நேரத்தில் கண் விழித்த பாபு ஏன் அம்மா உனக்கு சிரமம்? எதற்காக இவ்வளவு சிரமப்பட்டு காட்டுக்குள் வருகின்றீர்கள்? என்றான்.

எனக்கு ஒன்றும் சிரமமில்லை பாலகனே, நீ பசி தாங்க மாட்டாய் என்றுதான் இவ்வளவு தூரம் உன்னை தேடி கொண்டு வந்தேன். நீ முதலில்



சாப்பிடு என்றாள் பய்ஜாபாய். உண்டு முடித்த பாபு இனி இவளை என் பொருட்டு சிரமப்படுத்த கூடாது என முடிவு எடுத்துக் கொண்டான். மறுநாள் வேப்ப மரத்தடியில் தவம் இருப்பதை வழக்கமாக்கிக் கொண்டான். ஆனால் பாபுவிற்கு துன்பங்கள் வேறு வடிவில் வந்தன.

தினமும் பாபுவிற்கு தேவையான உணவை அளித்து பய்ஜாவால் காக்கப்பட்ட பாபுவின் தவத்திற்கு சீரடியில் வசிக்கும் சில முரட்டு சிறுவர்கள் மூலம் தடை ஏற்பட்டது. சிறுவர்கள் அனைவரும் ஒன்றுகூடி தவத்தில் இருக்கும் பாபுவை சீண்டுவது அவர்களுக்கு பெரும் ஆனந்தமாக இருந்தது.

ஆழ்ந்த தவத்தில் இருக்கும் பாபுவின் மீது கற்களை எறிவதும் மணலை கொட்டுவதும் பூச்சிகளை பிடித்து மடியில் விடுவதும் அவர்களின் தொல்லை எல்லை மீறுவதாக இருந்தது பாபுவிற்கு இச்செயல் தொல்லையாக இருந்ததே ஒழிய அவர்கள் மீது சிறிதும் கோபம் வரவில்லை.

அவ்வளவையும் அமைதியாக பொறுத்துக் கொண்டான். நான் எங்கு தங்குவது என்பது பற்றி தன் குருவின் அறிவிப்பை பெறும்வரை அமைதியான இடத்தில் தங்கி தவம் இருக்க பாபு விரும்பினான்/ சீரடி கிராமம் மிகவும் அமைதியாக இருக்கின்றது. ஆனால் அவனால் அங்கு தங்கி தவம் இயற்ற முடியாது போலி ருக்கிறது.

எல்லாம் இறைவன் செயல் என்று உணர்ந்த பாபு அடர்ந்த காடுகளுக்குள் சென்று விடுவது என முடிவெடுத்தான். பாபு புறப்பட்ட அடுத்த நாள் பைஜாவும், கங்காபாயும் மற்றவர்களுக்கும் ஊரைச் சுற்றியும் தேடினார்கள்.

ஏற்கனவே சீரடியில் தங்கியிருந்த ஞானி தேவிதாஸ் மக்களை கடிந்து

கொண்டார். கையில் கிடைத்த ரத்தினத்தை தொலைத்து விட்டீர்களே என்றார்.

விபரம் அறிந்தவர்களும் ஊர் பெரியவர்களும் நமக்கு கிடைக்க வேண்டிய பொக்கிஷம் நமது அசாக்கிரதையால் நம்மைவிட்டு போய்விட்டதாக புலம்பினார்கள்.

இளைஞர்களும் வெளியூர் சென்று வியாபாரம் செய்பவர்களும் ஆளாளுக்கு வெவ் வேறு இடங்களில் தேடி தேடி அலுத்து போனார்கள்.

வருடங்கள் கடந்தன. ஓரிருவரை தவிர மற்ற அனைவரும் பாபுவை மறந்தே போனார்கள். மனிதர்கள் மட்டுமல்ல இயற்கையும்தான். சீரடி கிராமத்தை மறந்து போய்விட்டது. வானம் பொய்த்தது. பூமி வெடித்தது. பசுமை போய் பஞ்சம் வந்தது. மூன்று வேளை உணவு என்பதே கனவாய் போனது. மக்கள் வாடி, வதங்கி போய்விட்டனர். பாபு சீரடியை விட்டு போய் மூன்று ஆண்டுகள் ஆயிற்று.

அப்போதுதான் தூப் என்ற கிராமத்தின் அதிகாரியாக இருந்த சாந்த் பாட்டில் தன்னுடைய மைத்துனருக்கு சீரடியை சேர்ந்த முகமது கான் என்பவரின் மகளை பேசி முடித்தார்.



வரும் வியாழக்கிழமை பெண்ணைப் பார்த்து அப்படியே திருமணம் முடிப்பதற்காக மாப்பிள்ளை வீட்டார் வருகின்றார்கள்.

அன்றோடு சீரடி கிராமத்தில் பஞ்சம் தொலைந்து இனி உலகம் உள்ளளவும் சிறப்புற்று விளங்க போகின்றது என்பதை அப்போது யாரும் அறிந்திருக்கவில்லை.

– (தொடரும்...)

சாயிமகராஜ் குருவைதேடி இணையத்தில் படிக்க...
www.saimaharaj.com

சாய் தியானா வாட்ஸ் அப் நம்பர்
99418 16692

Email: srirambaba1971@gmail.com



சமாதிக்குப்பின் பாபாவின் அற்புதங்கள்!

ஸ்ரீ தத்தாத்ரேய ஜெயராம் ராஜா என்பவர் ஒரு வைதீக பிராமணர். வழக்கறிஞர் 1955ல் அவர் சாயி சத்சரிதத்தை படிக்கும் பேறு பெற்றார். படித்து முடித்த மறுநாள் வியாழக்கிழமை அன்று பாபாவின் படத்திற்கு பூஜைசெய்து இனிப்புகளை நிவேதித்தார். அதே நேரம் அவரின் வீட்டு வாசலில் ஒரு இஸ்லாமிய பக்கீர் வந்து சாப்பாடு கிடைக்குமா எனக்கேட்டார்.

பிராமணரான ஜெயராம் ஒரு இலையில் உணவை போட்டு எங்காவது கொண்டு போய் சாப்பிடுங்கள் என்று கொடுத்தார். இங்கேயே ஒரு பக்கமாக சாப்பிடுகிறேனே என்று அங்கேயே அமர்ந்து சாப்பிட தொடங்கினார் பக்கீர். பாபா இப்படி கேட்டால் மறுப்போமா என்று மனதை சமாதானப்படுத்திக் கொண்டார் ஜெயராம்.

சாப்பிட்டதும் தட்சணை கேட்டார் பக்கீர், சில்லரைத்தான் இருக்கிறது. ஒரு கட்சிக்காரர் 50 ரூபாய் தர வேண்டும் அது வந்தால் தாராளமாய் கொடுப்பேன் என்றார் ஜெயராம்.

மூன்றேகால் மணிக்கு அந்த பணம் வரும். நான் 5 மணிக்கு வந்து தட்சணை வாங்கிக் கொள்கிறேன் என்று போய் விட்டார் பக்கீர்.

ஜெயராமுவிற்கு ஒரே ஆச்சரியம். இந்த பக்கீருக்கு சோதிடம் தெரியுமா? எங்கோ இருக்கும் தன் கட்சிக்காரர் யாரென்று இவருக்குத் தெரியாது. அப்படி இருக்க மூன்றே கால் மணிக்கு அவர் பணத்தோடு வருவார் என்கிறாரே, பார்க்கலாம் என்று எண்ணிக் கொண்டார்.

சரியாக மூன்றேகால் மணிக்கு அந்த கட்சிக்காரர் ஐம்பது ரூபாய் கொண்டு வந்து கொடுத்தார். தனக்கு இந்த பக்கம் ஒரு திடீர் அலுவல் ஏற்ப்பட்டதாகவும், அதனால் வந்ததாகவும் கூறினார்.

அதன்பின்பு சரியாக 5 மணிக்கு பக்கீர் வந்து பணம் வந்ததா? என்று கேட்டார். அவருக்கு 10 ரூபாய் கொடுத்தார் ஜெயராம். பக்கீர் விபூதி கொடுக்க அது ஜெயராமின் கையில் ரோஜாவாக மாறியது. ஜெயராம் பிரமிப்போடு நிமிர்ந்தபோது பக்கீர் மறைந்திருந்தார்.

ஸ்ரீ சாய்ராம் ஆத்மானந்த சபையில் நிகழ்ந்த மவுனம்

லதா பாபு



சென்ற 16.12.2018 அன்று நமது குருநாதர் அவர்கள் மவுனம் நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்திருந்தார். காலை 8ல் இருந்து மாலை 4 வரை செல்போனுக்கு அனுமதியில்லை. சிற்றுண்டி, மதிய உணவு அங்கேயே கொடுத்து விடுவார்கள்.

2015ல் இருந்து நான் மவுனத்தில் கலந்து கொள்கிறேன். மிகச்சிறந்த ஓர் அற்புத அனுபவத்தை என் உடலுக்கும், மனதிற்கும் மவுனம் தந்திருக்கின்றது என்பது அனுபவ உண்மை.

மவுனத்தில் கலந்து கொண்ட அன்று இரவு பல வருடங்களுக்கு பிறகு ஆழ்ந்து தூங்கினேன். இதை அனைவரும் உணரலாம். மறுநாள்

உடலும், மனமும் லேசானது போல் உணர முடியும். நான் மவுனத்தில் கலந்து கொண்டதின் மூலம் என் உடல் நோய்கள் சில என்னை விட்டு அகன்றிருப்பதை நன்றாக உணர முடிகின்றது.

மவுனத்தில் எங்கள் குருநாதர் நான்கு விதமான தியான முறைகளால் நமக்குள் அதிர்வலைகளை செலுத்துவதன் மூலம் நம்மை ஆழ்நிலை தியானத்திற்கு இட்டுச் செல்கின்றார். அந்த அதிர்வுகள் நாம் மவுனத்தில் இருந்து வெளியேறிய பின்பும் நம்மை சூழ்ந்திருப்பதை நன்றாக உணரமுடியும்.

இம்மவுன நிகழ்வை மாதா மாதம் தொடர்ந்து நடத்தினால் மிகவும் பயனுள்ளதாக இருக்கும் என்ற கோரிக்கையை குருவிடம் வைத்திருக் கின்றேன். நிச்சயம் ஆவன செய்வார் என்று நம்புகின்றேன்.

மவுனம் நிகழ்வு முடிந்து அதனை தொடர்ந்து நான்கு நாட்கள் எங்கள் குரு நாதர் மவுனம் இருந்தது குறிப்பிடத்தக்கது.

குரு வாழ்க! குருவே துணை!

மவுனத்தில் கலந்து கொண்டவர்களின் கருத்து

** உணர்வு சம்மந்தப்பட்ட நிகழ்வாக நிகழ்ந்ததால் வார்த்தைகளால் வடிவமைக்க முடியவில்லை. ஆயினும் என் வாழ்நாளில் புதுவித அனுபவத்தை புகுத்தியுள்ளீர்கள். நன்றி அய்யா நன்றி!*

– அகஸ்டின், திருநீர்மலை

** நான் வாழ்க்கையில் 5 நிமிடம் கூட பேசாது இருந்ததில்லை. இப்போது தான் முதன்முறையாக பலமணி நேரங்கள் மவுனம் இருந்திருக்கின்றேன். இது எனக்கு புதிய அனுபவமாக இருந்தது. 4 விதமான தியானங்களின் அதிர்வை என்னால் உணர முடிந்தது.*

– ஏ.தனலட்சுமி, திருநீர்மலை

** நான் ஏற்கனவே சிலமுறை மவுனம் நிகழ்ச்சியில் கலந்து கொண் டிருக்கின்றேன். இருப்பினும் இம்முறை அதிக அதிர்வுகளை உணர்ந்தேன். மவுனம் முடிந்தும் கூட வெகுநேரம் அதை உணர முடிந்தது.*

–புவனா சுரேஷ், சென்னை

** இயற்கையோடு ஒன்றிணைந்து*





கற்பனைக்கு எட்டாத அளவிற்கு என்னை மறந்து பயணித்தேன். மிக்க மகிழ்ச்சி. குரு வாழ்க! குருவே துணை!!

–பி.மகேஷ், சென்னை

* சொல்வதற்கு வார்த்தைகளே இல்லை மிகவும் ஆனந்தமாக இருந்தது.

– பாலாஜி, போரூர்

* புதிய அனுபவம், அருமை.

– சுரேஷ், ஸ்ரீபெரும்பதூர்

* நல்ல மாற்றங்களை உணர்ந்தேன். மவுனத்தில் இருக்கும்போது தேவையற்ற சிந்தனைகள் வரவில்லை. மனம் தெளிவாய் இருந்தது. என் உடலில் ஏதோ மாற்றம் நடந்ததை உணர்ந்தேன். என் குருவிற்கு என் நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

– ஏ.தனபால், சென்னை

* நல்ல அனுபவம், வார்த்தைகளால் கூற முடியவில்லை.–வெங்கட், தாம்பரம்

* நான் முதன்முறையாக மவுனம் இருக்கிறேன். எனக்கு இது புது அனுபவம். ஒருவித அதிர்வுகளை என் உச்சந்தலையில் உணர முடிந்தது. குரு பேசிக் கொண்டே மவுனத்தில் எங்களை வழிநடத்தினார். அவரின் பேச்சின் இடையே 4 முறை நான் மனதில் நினைத்ததற்கு பதில் கூறியது எனக்கு வியப்பாக இருந்தது. புதிய அனுபவம்.

– லாவண்யா, போரூர்.

* இது இரண்டாவது முறை மனதிற்கும், உடலுக்கும், உற்சாகம் பிறந்தது போல் இருந்தது.

– சுரேஷ், வேளச்சேரி

* நான் வாழ்க்கையில் மவுனமாக இருந்ததே கிடையாது. சிறிது நேரம் இருப்போம் என்றுதான் வந்தேன். ஆனால் முடியும்போது இன்னும் சிறிது நேரம் இருப்போமா என்று நினைத்தேன்.

– யுவநாதன். கொளத்தூர்.

* மவுனத்தில் கலந்து கொள்ளும் எண்ணமில்லாமல் தான் வந்தேன். ஆனால் கடைசிவரை கலந்து கொண்டு நான் மவுனமாக இருந்தது எனக்கே ஆச்சரியமாக இருந்தது. எல்லாம் பாபாவின் செயல்.

– யாஸ்மின் ஸ்ரீதர், சென்னை.

குரு வாழ்க! குருவே துணை!!

சாயி மகராஜ் குருவை தேடி

ஒரு வருட சந்தா இலவசம்

பாபாவின் மகாசமாதி வருடத்தை முன்னிட்டு விண்ணப்பத்தில் உங்கள் முகவரியை எழுதி கீழ்கண்ட முகவரிக்கு அனுப்பி வைத்தால் குலுக்கல் முறையில் 11 நபர்களை தேர்ந்தெடுத்து அவர்களுக்கு சாயிமகராஜ் குருவை தேடி இதழ் வரும் ஒரு வருடத்திற்கு இலவசமாக அனுப்பித் தரப்படும்.

To:

_____

_____

_____

_____

அனுப்ப வேண்டிய முகவரி:
ஆசிரியர், சாயி மகராஜ் குருவை தேடி,
17/7ஆ, பழனியப்பா முதல் தெரு,
முதல்மாடி, அயனாவரம்,
சென்னை 23.

சாய் ராஜயோகாவின் தயாரிப்பு



அமிர்த சூரணம்

அனைத்து நோய்களுக்கும் ஒரே தீர்வு. தொடர்ந்து மூன்று மாதம் எடுத்துக் கொள்ள அதிசயத்தக்க மாற்றத்தை நீங்களே உணரலாம்.

குப்பைமேனித் தைலம்

அனைத்துவிதமான தோல் நோய்களுக்கும் ஓர் அற்புத தீர்வு. சொறி, நமைச்சல் இருக்கும் இடங்களில் தடவ ஒரிரு நிமிடத்திலேயே குணம் கிடைக்கும்.



தேவைக்கு தொடர்பு கொள்ளவும்:
சாய் ராஜயோகா இயற்கை நல்வாழ்வு மையம்
9941816692,
8825831068.


ஓம் ஸ்ரீ சர்ப சித்தர் ஆதி ஜீவ பீடம்
சித்தர்பீட ஸ்தாபகர்
சிவஸ்ரீ டாக்டர் G.T. ரவிச்சந்திரன் சித்தர் அடிகளார்
இந்து ஆலய வழிபாடு மக்கள் பாதுகாப்பு கழகம்
உபயம் S.A. நட
மாநில தலைமை செயலாளர்
கோவிந்தராஜ் நகர், மாங்காடு
அலைபேசி : 97898 26263
சித்தர்களின் ஜீவ சமாதி தரிசனம்
ஸ்ரீலஸ்ரீ சர்ப்ப சித்தர்

இம்மாதம் சென்னை மாங்காடு கோவிந்தராசு நகரில் அமைந்திருக்கும் ஸ்ரீலஸ்ரீ சர்ப்ப சித்தரை தரிசிப்போம்.

1200 ஆண்டுகளுக்கு முன்பு தற்போது ஆலயம் அமைந்திருக்கும் இடத்தில் தவம் இருந்திருக்கின்றார் சர்ப்ப சித்தர். தற்போது உள்ள சீவ சமாதி ஆலயத்தை உருவாக்கி பராமரித்து வருபவர் திரு.சிவஸ்ரீ டாக்டர் ஜி.டி.ரவிச்சந்திரன் சித்தர் அடியார் அவர்கள்.



- அயனாவரம்
வெங்கடேசன்
9941782523

அடியார் கனவில் சர்ப்ப சித்தர் அடிக்கடி சர்ப்ப வடிவில் வந்து பேசுவது வாடிக்கை. அதன்பின்பு காலமாற்றத்தால் அடிகளார் அவர்கள் மிகப்பெரிய தொழில் அதிபராக இருந்திருக்கிறார்.

பின்பு கர்மவினையின் காரணமாக தொழிலில் நட்டம் அடைந்து சாப்பாட்டிற்கே மிகவும் சிரமப்பட்டிருக்கின்றார். அதன்பிறகு 1999ம் வருடம் ஒருநாள் சர்ப்ப சித்தர் அடியாரின் கனவில் தோன்றி தான் இருக்கும் இடத்தை தெரிவித்து அதை சீர்படுத்தி மக்களின் வழிபாட்டிற்கு ஏற்பாடு செய்யும்படி கட்டளை இட்டுள்ளார் சர்ப்ப சித்தர்.

அதன்படி அந்த இடத்தை தேடி அங்கு மண்டிக்கிடந்த புதர்களை அகற்றிப் பார்த்தால் அங்கு ஒரு பூதக்கல்லும், ஒரு பாம்பு புற்றும் இருப்பதை அறிந்து, அதை சீர்படுத்தி மக்களுக்கு தெரியப்படுத்தி பக்தர்களின் உதவியோடு ஆலயம் எழுப்பி அதை பராமரித்து வருகிறார் சித்தர் அடியார் அவர்கள். இன்று சர்ப்ப சித்தரின் அருளால் துயரத்தில் இருந்து மீண்டு பழைய நிலைக்கு வந்துள்ளார் அடியார் டாக்டர் ஜி.டி.ரவிச்சந்திரன் அவர்கள்.

1999 முதல் 2003 வரை வெட்ட வெளியில் இருந்த இந்த ஆதி சிவ பீடம், அடியார் ஒருவரின் உபயத்தால் கீற்றுக் கொட்டகையாக மாற்றப்பட்டது. அதன்பின்பு அடிகளாரின் பெருமுயற்சியால் 2003ல் ஆலயம் எழுப்பப்பட்டு ஸ்ரீலஸ்ரீ விடோபானந்த சுவாமிகளால் குடமுழுக்கு நடத்தி வைக்கப்பட்டது.

ஆலயத்திற்கு அருகிலேயே ஸ்ரீ சர்ப்ப சித்தர் திருவடி ஆத்ம ஞான பீட குகை புள்ளது. அதில் அமர்ந்து பக்தர்கள் தியானம் செய்யலாம். பக்தர்கள் வேண்டுவன வேண்டியபடியே நடப்பதால்





பக்தர்கள் கூட்டத்திற்கு குறைவில்லை.

கருவறையில் உள்ள பூதக்கல்லின் கீழ் சிவலிங்கம் வரையப்பட்டுள்ளது. அதன் மேல் யோக சக்கரம் உள்ளது. யோக சக்கரத்தின் மகிமையால் கல்லிற்குள் பஞ்ச பூதங்களும் அடக்கம் என்பதை குறிக்கவே இக்கல்லை பூதக்கல் என்று அழைக்கின்றனர்.

இந்த பூதக்கல்லின் விசேச தன்மை என்னவென்றால் 15 நாட்களுக்கு ஒருமுறை கிழக்கும், மேற்குமாக சாயும். இதை பக்தர்கள் கண்கூடாக காணலாம்.

நீங்களும் சர்ப்ப சித்தரை தரிசித்து வாழ்வில் வளம் பெறுங்கள்.

ஆலய முகவரி:

ஓம் ஸ்ரீ சர்ப்ப சித்தர் ஆதி சிவ பீடம், கோவிந்தராசு நகர், மாங்காடு, சென்னை – 600 122.

ஆலய தொடர்புக்கு:

ஸ்ரீ டாக்டர் ஜி.டி.ரவிச்சந்திரன், போன்: 9789826263

பேருந்து வழித்தடம்:

16 M கோயம்பேடு – மாங்காடு

16 K கோயம்பேடு – குன்றத்தூர்

17 B பிராட்வே – மாங்காடு

குருபூஜை: சித்ரா பௌர்ணமி

ஓம் சாய்ராம்

சாயி இடம் விற்பனைக்கு

(ஆவடி) ஆரிக்கன்பேடு, மெயின் ரோட்டில் பேருந்து நிறுத்தம் அருகில் 2000 சதுர அடி காலிமனை விற்பனைக்கு உள்ளது. சுவையான குடிநீர் வசதி, சுற்றிலும் குடியிருப்பு உள்ளன. உடனடியாக வீடு கட்டி குடியேறலாம்.

தொடர்பிற்கு:

6382771587

ஆவின்

புதியது தூயது சுகாதாரமானது

ஜோஸ் ஆவின் பாலகம்

JYOSH AAVIN PARLOUR

எங்கள் ஆவின் பாலகத்தில், வீட்டிற்கு தேவையான
பால் பொருட்கள் மற்றும் ஐஸ்கிரீம் வகைகள்
மொத்தமாகவும், சில்லறையாகவும் கிடைக்கும்!



தொடர்பிற்கு:

160/92, செல்லப்பா தெரு,

குயப்பேட்டை, ஓட்டேரி, சென்னை – 600 012.

No. 160/92, Chellappa Street, Kosapet, Ottteri, Chennai - 600 012.

Cell: 98840 74886

தொடர் –8:



பாபா காட்டும் வழி

ஒருமுறை சீரடியில் சிறுவர்கள் கூட்டம் ஒன்று, வேலை செய்து கொண்டிருக்கும் தொழிலாளர்களிடையே செருப்பு முதலான அவர்களின் உடைமைகளை திருடி ஒளித்து வைத்துவிட்டு மறைவாய் இருந்து ரசித்து பார்த்து கொண்டிருந்தனர்.

வேலை முடிந்து திரும்பி வந்த தொழிலாளர்கள் தமது உடைமைகளை காணாது வருந்துவதைக் கண்டு சிறுவர்கள் மகிழ்ச்சி அடைந்தனர். விபரம் அறியாத வயதில் அடுத்தவரை துன்பப்படுத்தி அதில் எழும் சந்தோசத்தை அனுபவிப்பதே மனிதர்களின் வழக்கமாகும். சரியான நேரத்தில் ஞானகுருவின் போதனைகள் அவர்களின் காதுகளுக்கு எட்டாது போனால் இவர்களே வாழ்வின் இறுதிவரை அடுத்தவரைப் பற்றிப் புறம் பேசி அவர்களை வருந்த வைக்கின்றனர்.

இவைகளுக்கு முக்கிய காரணம் நான் யார் என்பதை பற்றி அறிய முயலாமல் இவ்வுலக பொருள்களின் மீதான ஆர்வமே காரணமாகும். இவர்களால் ஒரு போதும் எளிமையாய் வாழ்வது இயலாதது ஆகும். கடைசிவரை எதிர்மறையான எண்ணங்களையே வெளிப்படுத்தி பிறரை துன்பத்தில் ஆழ்த்துவர்.

தன்னிடம் இல்லாத பொருள் அடுத்தவரிடம் இருக்கிறதா என்ற ஆராய்ச்சி செய்வார். அப்படி இருந்து விட்டால் அந்த பொருளை திருடியாவது தனக்கு சொந்தமாக்கி விட வேண்டும் என்று துடிப்பார். ஒன்றுக்கும் உதவாத பொருளாக கூட இருக்கலாம், அதை அடைந்த பின்னர் அதற்கு பின்னால் வரும் அசிங்கத்தை கூட நினைத்து பார்க்க மாட்டார்கள். இவர்களது வாழ்வு உலக சுகத்தை அனுபவிப்பதிலேயே இருக்கும். இந்த மாயையில் உழல்பவன் பல பிறவிகள் எடுக்க வேண்டி வரும்.

இவர்கள் எப்போதும் அடுத்தவரைப் பற்றியே சிந்தித்து வாழ்வதால் முயற்சி செய்தாலும் இவர்களால் எளிமையாய் வாழ இயலாது. தன்னை அறிவதே ஆனந்தம் அல்லவா. அதைவிடுத்து எப்போதும் அடுத்தவரைப் பற்றி நினைப்பதும் அவர்கள் இதை குறித்தே வாழ்வதும் எவ்வாறு ஆனந்தம் ஆகும்.

அதனால் ஏற்படும் உண்மையான ஆனந்தம் எது என்பதை மிக அழகாக சிறுவர்களுக்கு ஒரு சிறிய நடைமுறையினால் சுட்டிக்காட்ட விரும்பி மறுநாள் மாலையில் அவர்கள் முன் தோன்றினார்.



அவர்கள் எப்போதும் போல அவர்களது உடைமைகளை எடுத்து ஒளித்து வைத்துக் கொண்டிருந்தனர். அவர்களிடம் சென்ற பாபா நீங்கள் என்ன செய்து கொண்டிருக்கிறீர்கள் என்றார்.

அச்சிறுவர்களோ, நாங்கள் அந்த மனிதர்களின் செருப்புகளை ஒளித்து வைத்து விளையாடி கொண்டிருக்கிறோம். அவர்கள் செருப்புகளைத் தேடி அலைவது பார்ப்பதற்கு மிகவும் ஆனந்தமாக இருக்கும். நீங்களும் விளையாடவருகிறீர்களா என்று அழைத்தனர்.

பாபா அவர்களிடம், இதை விட இன்னும் ஆனந்தமான விளையாட்டை நான் சொல்லி தருகிறேன் வருகிறீர்களா என அழைக்க அனைவரும் பாபாவிடம் ஓடி வந்தனர். பாபா தன் சட்டைப்பையில் கையை விட்டு சில வெள்ளிக்காசுகளை எடுத்தார். அதை அந்த சிறுவர்களை அழைத்து ஒவ்வொரு சோடி செருப்புகளிலும் ஒரு வெள்ளி காசை வைத்து விட்டு வருமாறு கூறினார்.

அவர்களும் அப்படியே செய்தனர். அதன் பின்பு அனைவரும் புதர்களின் மறைவில் அமர்ந்தபடி என்ன நடக்கிறது என்று வேடிக்கை பார்த்தனர். பணி முடிந்து திரும்பிய வேலையாட்கள் தங்களின் செருப்புகளில் வெள்ளிக்காசு இருப்பதை கண்டவர்கள் அளவில்லா ஆனந்தம் அடைந்து, அந்த வெள்ளிக் காசை எடுத்து கண்களில் ஒற்றிக் கொண்டு ஆனந்தமாய் சென்றனர்.

அதை பார்த்துக்கொண்டிருந்த சிறுவர்களுக்கு அடுத்தவரை துன்பப்படுத்தி சந்தோசப்படுத்துவது மட்டுமல்ல ஆனந்தம். அவர்களை சந்தோஷப்படுத்தியும் ஆனந்தம் பெறலாம் என்ற உண்மை விளங்கியது.

பாபா காட்டும் வழியும் இதுவே ஆகும். சிறுவர்களைப் பார்த்து புன்னகைத்தபடி அவ்விடத்தை விட்டு அகன்றார். - (தொடரும்..)

புனித பாதுகை

சீரடியில் பாபா முதன்முதலில் தோன்றிய வேப்ப மரத்தடியில் பாபாவின் புனிதமிக்க பாதுகைகள் பிரதிட்டை செய்யப்பட்டன. தினந்தோறும் ஆயிரக்கணக்கான பக்தர்கள் மனமுருகி வழிபட்டு செல்லும் அப்பாதுகையின் வரலாறு அற்புதமானது.

அது கி.பி.1912ஆம் ஆண்டு நடை பெற்ற அழகான நிகழ்வு. ஒருநாள் பாபாவின் மிகச்சிறந்த பக்தர்களான கோத்தாரே, உபாசினி, தீட்சித் ஆகியோர் கூடி விவாதித்தனர். பாபா முதன்முதலாக சீரடிக்கு வருகை தந்தபோது புனிதமிக்க வேப்ப மரத்தடியின் கீழ் அமர்ந்து காட்சி தந்தார்.

அதன் நினைவுச் சின்னமாக பாதுகைகளை அமைக்க மூவரும் முடிவு செய்தனர். ஒரே கல்லில் உருவாக்கப்பட்ட பாதுகைகளை அழகாக வடிவமைத்தனர். அப்பாதுகைகளில் தாமரை மலர்கள், சங்குகள் மற்றும் புனிதமிக்க வேப்பமரத்தின் சிறப்புகள் பாபாவின் யோக சக்தியை போற்றும் ஒரு சுலோகம் ஆகியவற்றை பொறிக்குமாறு உபாசினி கூறினார்.



அவர் கூறிய அறிவுரையின் பேரில் கோத்தாரே பம்பாய் சென்றார். அங்கு பாபாவின் பாதுகைகள் அற்புதமான வகையில் டாக்டர் ராமாராவ் கோத்தாரி என்பவர் உருவாக்கினார்.

பின்பு ஆவணி மாத பௌர்ணமி நாளில் காலை 11 மணி அளவில் ஜி.கே.தீட்சித் அப்புனித பாதுகைகளை தன் தலையில் சுமந்தபடி கண்டோபா கோவிலில் இருந்து பக்தர்கள் புடைசூழ ஊர்வலமாக புறப்பட்டார். அந்த அழகான பாபாவின் பாதுகைகளை ஊர்வலத்தில் கொண்டு வரப்பட்டு துவாரகாமாயி வந்தடைந்தது.

பாபா அப்புனிதமிக்க பாதுகைகளை தனது கைகளால் தொட்டு ஆசீர்வதித்தார். இப்பாதுகைகள் இறைவனின் திருவடிகள், வரும் குரு பூர்ணிமா நாளில் இதை வேப்பமரத்தடியில் பிரதிட்டை செய்யுங்கள் என்றார்.

பாபா கூறியபடி அந்த வண்ண மயமான குரு பூர்ணிமா நாளில் பாபா அமர்ந்து ஆசீர்வதித்து காட்சி தந்த புனிதமிக்க அந்த வேப்பமரத்தடியில் பக்தர்களின் பரவசத்துடன் அப்பாதுகைகள் பிரதிட்டை செய்யப்பட்டது.

பாபா ஆசீர்வதித்த அப்பாதுகைகளையே வணங்கத் தக்கவை. பாதுகைகள் பிரதிட்டை செய்யப்பட்ட அன்று முதல் பாபாவின் பக்தர்கள் பூசைகள் செய்தும், விளக்குகள் ஏற்றியும் பக்தி பரவசத்துடன் வழிபட்டு வருகின்றார்கள்.

சீரடி செல்லும் பக்தர்கள் அனைவரும் அப்பாதுகைகளை வணங்கி தரிசனம் செய்யுங்கள். அதுவே புனித பாதுகையாகும்.

சாயி மகராஜ் குருவை தேடியின்
கஜா புயல் நிவாரண உதவி

சென்ற மாதம் கஜா புயலால் பாதிக்கப்பட்ட டெல்டா மாவட்ட மக்களுக்கு சாயிமகராஜ் குருவை தேடி ஆன்மீக மாத இதழின் மூலம் நம்மாலான சிறிய உதவியையாவது செய்தால் என்ன, என்ற சகோதரி ரம்யா முருகதாஸ் அவர்களின்



தூண்டுதலின் பேரில் நமது ஸ்ரீ சாய்ராம் ஆத்மஞான சபையின் உறுப்பினர்களிடம் உதவி கோரியிருந்தோம்.

உடனடியாக நமது உறுப்பினர்கள், கடுகு சிறுத்தாலும் காரம் குறையாது என்பதுபோல், பால்பவுடர், மளிகை பொருட்கள், மெழுகு வர்த்திகள், பிஸ்கட்ஸ் என வாங்கிக் கொடுத்தனர்.

நாங்கள் கேட்காமலே, ஆன்மிக சேகவர், குரு அருள் வேண்டி திரு.அசோக் குமார் அவர்கள், நிவாரண உதவியாக 7 மூட்டை அரிசியும், நமது ஸ்ரீ சாய்ராம் ஆத்மஞான சபைக்கு ஏற்றுவதற்கு நறுமணமிக்க ஊதுபத்திகள் இரண்டு பெரிய டப்பாக்கள் வாங்கி வந்து, உடல்நலமில்லாததை கூட பொருட்படுத்தாது, அவரின் சாரதி திரு.திருநாவுக்கரசு அவர்களோடு நேரில் வந்து வழங்கிச் சென்றார்.

திரு.உதி மூர்த்தி அவர்கள் என்னை அழைத்துச் சென்று, சண்முகா டீ சர்ட் எஸ்.கனராஜ் அவர்களிடம் 100 டீ சர்ட்டுகள் வாங்கி அளித்தார். திருமதி முத்துலெட்சுமி அவர்களின் உதவியுடன் சாயி சேவகர் திரு.மாதவராஜ் அவர்களும், திரு.ராஜேந்திரன் அவர்களும் 6 பெட்டிகள் பிஸ்கட்டும், 2 பெட்டிகள் கொசுவர்த்திகளும் அனுப்பி உதவினார்கள்.

அனைத்துப் பொருட்களையும் தஞ்சை மாவட்டத்தைச் சேர்ந்த அன்பு நண்பர் திரு.முகம்மது பாரூக் மூலமும், புதுக்கோட்டை மாவட்டத்தை சேர்ந்த



திரு.ரம்யா முருகதாஸ் மூலமும் நிவாரணப் பொருட்கள் பாதிக்கபப்ட்ட மக்களுக்கு சென்றடைந்தன.

உதவிய அனைத்து அன்பு உள்ளங் களுக்கும் சாயி மகராஜ் குருவை தேடி பத்திரிகையின் சார்பில் நெஞ்சார்ந்த நன்றியை தெரிவித்துக் கொண்டு பாதிக்கப்பட்ட மக்கள் அனைவரும் மிக விரைவில் புதுவாழ்வு பெற எல்லாம் வல்ல சற்குரு சாயிபாபாவை வேண்டி பிரார்த்திகின்றோம்.





காலக் கணக்கு!

1916ஆம் ஆண்டு பிளேக் நோய் கடுமையாக இருந்தது. பாபாவிற்கு வழக்கமாக கொண்டு வரப்படும் நைவேத்தியமாகிய இனிப்புப் பண்டங் களை ஒருநாள் யாரும் கொண்டு வரவில்லை. பாபா தன் அருகே இருந்த நார்க்கேயை அழைத்து சீரடியில் இருக்கும் மிட்டாய் கடைக்காரனிடம் சென்று இனிப்பு வாங்கி வரும்படி கூறினார்.

நார்க்கேயும் மிட்டாய் கடைக்குச் சென்றார். ஆனால் மிட்டாய் கடைக்காரனா பிளேக் நோயினால் அன்றுதான் இறந்துபோய் அவனது கடையிலேயே கிடத்தப்பட்டிருந்தான். இருப்பினும் பாபாவின் உத்தரவை மிட்டாய்க் கடைக் காரானின் மனைவியிடம் தெரிவித்தார் நார்க்கே.

அவள் அழுதுகொண்டே அலமாரியில் இருந்து வேண்டிய இனிப்புகளை எடுத்துக் கொள்ளச் சொன்னாள். நார்க்கேயும் அப்படியே எடுத்துக்கொண்டார். இருப் பினும் நார்க்கேயின் தேகம் முழுவதும் நடுநடுங்கி வெலவெலத்துப் போய்விட்டது.

அங்கிருக்கும் இனிப்புகளை தான் எடுத்து செல்வதால், தன்னையும் இதை உண்பவர்களையும் வியாதி தொற்றிக் கொண்டால்... இதே எண்ணத்துடன் பாபாவிடம் சென்றபோது பாபா நார்க்கேயைப் பார்த்துசீரடியில் தங்குவதால் இறந்து போய் விடுவாய் என்றும், இங்கிருந்து போய் விடுவதால் உயிர் வாழலாம், என்றும் எண்ணுகிறாய். அப்படி அல்ல, எவன் காலனால் அழிக்கப்படவிருக்கிறானோ அவன் எங்கிருந்தாலும் அழிக்கப்படுவான்.

யார் ஒருவன் இறந்தாக வேண்டுமோ, அவன் இறந்தேயாக வேண்டும். எது அணைக்கப்பட வேண்டுமோ அது அணைக்கப்பட்டே ஆக வேண்டும் என்று கூறினார்.

பிளேக் நோயால் இறந்து கிடந்த இனிப்புக் கடைக்காரரின் வீட்டு இனிப்புகள் அனைவருக்கும் பிரசாதமாக வழங்கப்பட்டது. ஒருவரையும் பிளேக் பிடிக்கவில்லை.

பாபாவின் சன்னதியில் இருக்கும் எந்த பக்தனையும் அபாயங்கள் ஒன்றும் சாராது என்பதனையும், பக்தனது நல்வாழ்வை பாபா எப்போதும் கண்காணித்து வருகிறார் என்பதையும் உணர்ந்து கொண்டார் நார்க்கே.

மகான்களின் வாழ்வில்

கதாகாலச்சேபம் செய்யும் ஹரிதாஸ் என்பவர் நானா சாந்தோர்க்கு நண்பர். இருவரும் சீரடி சென்று பாபாவை தரிசனம் செய்ய முடிவு செய்தனர். தரிசனம் முடிந்து மறுநாள் அகமத் நகரில் இருவருக்கும் ஒரு முக்கிய வேலை இருந்தது.

எனவே ஒரே பயணத்தில் இரண்டு வேலைகளையும் முடித்துவிடலாம் என்று கணக்குப் போட்டு சீரடி புறப்பட்டனர். பாபாவை தரிசனம் செய்து முடித்ததும் இருவரும் ரயில் வண்டியை பிடிக்க எண்ணி பாபாவிடம் புறப்படுவதற்கு அனுமதி கேட்டனர்.

பாபா கூறினார், நீங்கள் இப்போது போக வேண்டாம், மதிய உணவு முடிந்து பின் செல்லுங்கள் என்றார். மதிய உணவிற்கு பின் செல்வதானால் கண்டிப்பாக ரயிலை தவறவிட்டு விடுவோம். மறுநாள் அகமத்நகரில் நடக்கும் நிகழ்ச்சி ரத்தாகி விடும் என்று ஹரிதாஸ் பாபாவின் சொல்லை மீறி புறப்பட்டுவிட்டார்.

பாபாவின் வார்த்தைகளை மீறாத நானா சாப்பிட்டு விட்டே புறப்பட தீர்மானித்தார். எனவே நானாவை விட்டுவிட்டு ஹரிதாஸ் மட்டும் ரயில் நிலையத்திற்கு புறப்பட்டார். ரயில் நிலையம் சீரடியில் இருந்து 20 கி.மீட்டர் தொலைவில் கோபர்கான்னில் மட்டுமே இருந்தது.

சாப்பாட்டை முடிந்துக் கொண்டு நானா பாபாவிடம் வந்தபோது, பாபா, நீ இப்போது ரயில் நிலையத்திற்கு



கிளம்பு என்று அனுமதி கொடுத்து, மேலும் கூறினார்.. உன் நண்பன் ஹரிதாசை பார்த்தாயா, உன்னுடன் வருகிறான். ஆனால் சுயநலம் கருதி உன்னை இங்கேயே விட்டுவிட்டு ஓடுகிறான், உன்னை இடையில் விட்டுச் செல்பவர்களிடம் நீ நட்பு பாராட்டாதே! எந்நிலையிலேயும் உன்னை விட்டுச் செல்லாதவர்களேயே நீ நண்பர்களாக்கிக் கொள்ள வேண்டும். அவர்களே நல்ல நண்பர்கள் ஆவார்கள் என்று அறிவுரை வழங்கினார்.

இரயில் நிலையத்திற்கு தாமதமாக வந்து சேர்ந்த நானா, ஹரிதாஸ் அங்கே பசியுடன் உட்கார்ந்திருப்பதை கண்டார். ஏன்னெனில், அவர்கள் செல்லவிருக்கும் இரயில் வண்டி ஐந்துமணி நேரம் தாமதமாக வருகிறதாம்.

நானாவிற்கு வியப்பாக இருந்தது. இரயில் தாமதமாகும் என்று பாபாவிற்கு எப்படித் தெரியும். அவருக்கு தெரியுமோ, தெரியாதோ மகானின் வாக்கு பொய்க்காது என்பது இதன் மூலம் உறுதியாகிறது.

ஹரி கதைகள் சொற்பொழிவுகள் மூலம் ஊருக்கு உபதேசம் செய்யும் பண்டிதர்கள் மகான்களுடைய வார்த்தைகளில் திடமான நம்பிக்கை வைத்து அதன்படி நடக்க வேண்டும் என்ற நியமத்தை தங்கள் வாழ்க்கையில் கடைபிடிப்பதில்லை. இந்த ரகத்தைச் சேர்ந்த பண்டிதர்களில் ஒருவரான ஹரிதாஸ்க்கு பாபா இதன்மூலம் பாடம் புகட்டினார் என்பதனை நாம் உணர்ந்து கொள்ள வேண்டும்.

மகான்களுடைய வார்த்தைகளில் நம்பிக்கை வைத்த நானா திருப்தியாக உணவருந்திவிட்டு தகுந்த நேரத்தில் இரயில் நிலையம் வந்துவிட்டார்.



மகானின் வார்த்தைகளில் நம்பிக்கை இல்லாத ஹரிதாஸ் பட்டினியுடன் இரயிலுக்காக வெகுநேரம் காத்திருக்கும் படியாகிவிட்டது.

சாயியை பணிவோம்!

சகல நன்மையும் பெறுவோம்!!

அன்னதான சேவை

அன்பிற்கினிய சாயி சொந்தங்களே...

நமது சாயி மகராஜ் குருவை தேடி பத்திரிகையின் சார்பாக, பிரதிவாரம் வியாழன் தோறும், நடமாட முடியாமல் இருக்கும் முதியோர்கள், உடல் ஊனமுற்றோர்கள், மனநலம் குன்றியோர்களின் இருக்கும் இடம் தேடி சென்று அன்னதான சேவை நடந்து வருகிறது. அன்னதான சேவையில் பங்குபெற காணிக்கை அனுப்ப விரும்பினால் கீழ்கண்ட வங்கி கணக்கிற்கு அனுப்பி உதவலாம்.

S.Jayanthy,

93/34. K.H. ரோடு, *2வது மாடி (*SBI *பேங்க் எதிரில்),*

அயனாவரம், சென்னை – 600 023.

ஆன்லைனில் அனுப்ப:

S.Jayanthy, INDIAN BANK
AC.No: 602264370 , IFS Code No: IDIB000P056
(Purasaiwakkam Branch) Chennai

இம்மாத அன்னதான நன்கொடையாளர்கள்:

1. திரு.தி.கார்த்திகேயன், கோவை – ரூ.2000
2. திரு. சாய் சுந்தர், சென்னை – ரூ.1200
3. திரு.பா.செந்தில்குமார், சென்னை – ரூ.1000
4. திருமதி.லலிதா, சென்னை – ரூ. 700
5. திரு. தி.ராஜபாண்டி, டி.கள்ளிப்பட்டி – ரூ.500
6. திருமதி.ஜெயசாந்தி, அம்மைநாயக்கனூர் – ரூ.200
7. திருமதி.செல்வி, அம்மைநாயக்கனூர் – ரூ.200
8. திருமதி.ஷீலா, சின்னாளப்பட்டி – ரூ.200
9. திருமதி. குமுதா, சின்னாளப்பட்டி – ரூ.100
10. திருமதி.நாகு, மதுரை – ரூ.100
11. திருமதி.மீனா, மதுரை – ரூ.100
12. திருமதி. சாந்தி, அம்மையநாயக்கனூர் – ரூ.100
13. திருமதி. அபிராமி, அம்மையநாயக்கனூர் – ரூ.100

14. திருமதி.உமாராணி, அம்மையநாயக்கனூர் – ரூ.100
15. திருமதி.புஷ்பவள்ளி, அம்மையநாயக்கனூர் – ரூ.100
16. திருமதி.தனலட்சுமி, அம்மையநாயக்கனூர் – ரூ.100
17. திரு. தனபால், சென்ன அரிசி – 1 மூட்டை அரிசி
18. திரு. அகஸ்டின், திருநீர்மலை – 1 மூட்டை அரிசி
19. திரு. பாலாஜி, போரூர் – 5 லிட்டர் ஆயில்
20. திரு. சாந்தமூர்த்தி, போரூர் – 5 லிட்டர் ஆயில்
21. திருமதி. நிர்மலா, யோகலட்சுமி, சென்னை – ரூ. 500
22. ஜி.வி.யஸ்வந்த் குமார், ஜி.வி.சாய் பிரகா ஸ்ரீ – ரூ.500
23. திருமதி.பஞ்சவர்ணம், சின்னாளப்பட்டி – ரூ. 100
24. திருமதி. நித்யா, அம்மைநாயக்கனூர் – ரூ. 100
25. திருமதி. சுப்புலட்சுமி, அம்மைநாயக்கனூர் – ரூ.100



நீங்கள் செய்யும் அன்ன தானத்தின் ஒவ்வொரு பருக்கையும் என் வாயில் இடுவதாக அர்த்தம்!

சந்தா செலுத்தும் அன்பர்களுக்கு...

* 1 வருட சந்தா – ரூ. 150 (தபால் செலவு உள்பட)
* 3 வருட சந்தா – ரூ. 400 (தபால் செலவு உள்பட)
* ஆயுள் சந்தா – ரு. 1,500 (தபால் செலவு உள்பட)

காணிக்கை, சந்தா அனுப்புகின்றவர்களுக்கு மாதம்தோறும் சாயிமகராஜ் குருவை தேடி புத்தகம் உங்கள் இல்லம் தேடி வரும். காணிக்கை சந்தா அனுப்புகிறவர்கள் தவறாது தங்கள் முகவரியை கீழ்கண்ட முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.

V. ஸ்ரீராம், ஆசிரியர்
'சாயி மகராஜ் குருவை தேடி',
93/34. K.H. ரோடு, 2வது மாடி (SBI பேங்க் எதிரில்),
அயனாவரம், சென்னை – 600 023.

ஆன்லைன் மூலம் காணிக்கை, சந்தா செலுத்த...

V.SRIRAM
INDIAN BANK (Purasaiwakkam Branch) Chennai
AC.No: 6219480677
IFS Code No: IDIB000P056.

ஆயுள் சந்தாதாரர்கள்

10. எஸ்.கவுரிசங்கர் அவர்கள், கோவை
11. ஆர்.குமார் ராஜன் அவர்கள், கோவை
12. பி.பாபுராஜ், அவர்கள், கோவை
13. கே.பிரபு அவர்கள், கோவை
14. கே.ரவிக்குமார் அவர்கள், கோவை
15. ஏ.ராமலிங்கம் அவர்கள், கோவை
16. கே.நாகராஜன் அவர்கள், கோவை
17. வி.ஆர்.ரமேஷ்குமார் அவர்கள், சென்னை
18. பி.மகேஸ்வரி புருஷோத்தமன், சென்னை
19. எஸ். அரவாமுதன், சென்னை
20. ASV. REMEDIES INDIA, CHENNAI

Owned and Publishsed by: V.SRIRAM From 17/7A, Palaniappa Ist Street, 1st floor, Ayyanavaram, Chennai - 23. At Printed by him at Chennai Offset Printer, No: 19/1, 21/2 Kitapath Khan Phathr St, Elles Road, Chennai-2. Editer:V.SRIRAM



ஓம் சாய்ராம்!

PH: 94440 35354
78718 00333

LIC
भारतीय जीवन बीमा निगम
LIFE INSURANCE CORPORATION OF INDIA



K.V.MURALI

Development Officer

LIFE INSURANCE CORPORATION OF INDIA

OFFICE: CBOXX, No. 75, Wall Tax Road, Chennai - 3
Resi: MURALI ILLAM, 30/1 Ranga Bashyam Street,
West Saidapet, Chennai - 600 015.
Email: muralivissa@gmail.com


பாபா பக்தர்களுக்கு இனிய புத்தாண்டு
நல்வாழ்த்துக்கள் 2019!
K.ஆளவந்தார், A.சரஸ்வதி
இந்துமதி ரவிக்குமார், ஜெயந்தி முரளி
மற்றும் குடும்பத்தினர் சைதாப்பேட்டை, சென்னை.


அனைவருக்கும் இனிய
புத்தாண்டு வாழ்த்துக்கள் 2019
B.RAVIKUMAR, A.R.INDUMATHI
R.MANISH & R.VAISHALI
Saidapet, Chennai.

Karayil Trading Company

G/B52, Wholesale Food Grain Market, Koyambedu, Chennai

Ph: 9841289911, 9841495253, 8056406222

fssai 10018042003708

Item	Price -100 Gms	50 Gms
Cardamom / ஏலக்காய்	160	80
Black Pepper/ கருமிளகு	55	27.50
Ceylon Patta / சிலோன்பட்டை	125	62.50
Nayam Patta / நயம் பட்டை	21	10.50
Cloves / கிராம்பு	80	40
Kalpasi / கல்பாசி	60	30
Marati Moggu / மராட்டி மொக்கு	15	7.50
Nutmeg Flower / ஜாதி பத்ரி	175	87.50
Star Anise / அனாசி பூ	30	15
Bay Leaf / பிரின்ஜி இலை	12	6

Millets / உலர்ந்த பழம்	Price - 1 Kg	100 Gms
Cashew Whole / முந்திரி முழுசு	840	84
Cashew Split/ உடைந்த முந்திரி	800	80
Almond / பாதாம்	775	77.50
Pista / பிஸ்தா	1550	155
Walnut / அக்ரூட்	1150	115
Kimia Dates / பேரீச்சம் பழம்	480	48

Millets / சிறு தானியம்	Price - 1 Kg	500 Gms
Kambu / கம்பு	36	18
Kuthiravali / குதிரை வாலி	62	31
Samai / சாமை	75	37.50
Thinai / தினை	48	24
Varagu / வரகு	68	34
Ragi / ராகி	35	17.50

Idly Rice / இட்லி அரிசி	1.கி. – 35
Ponni Boiled Rice / ஆரணி பொன்னி புழுங்கல் அரிசி	1.கி. – 55
Ponni Raw Rice / பொன்னி பச்சரிசி	1.கி. – 50
Biriyani Rice / பிரியாணி அரிசி	1.கி. – 105
Whole Wheat / கோதுமை	1.கி. – 36
WBrown Sugar / நாட்டுச் சர்க்கரை	1.கி. – 62

Cold Pressed Oil	Price - 1 Litre	500 ml
Sesame Oil / மரச்செக்கு நல்லெண்ணெய்	240	
Groundnut Oil / மரச்செக்கு கடலெண்ணெய்	200	
RKG Ghee / RKG நெய்	540	275

Item	Price -1Kg	100 Gms
Turmeric Stick / மஞ்சள் கட்டி	155	15.50
Sombu / பெருஞ்சீரகம்	190	19
Vendayam / வெந்தயம்	80	8
Jeerakam / சீரகம்	270	27
Mustard / கடுகு	100	10
Kismiss (Black) / உலர் திராட்சை கருப்பு	320	32
Kismiss (Brown) / உலர் திராட்சை பழுப்பு	300	30
White Sesame / வெள்ளை எள்	200	20
Black Sesame / கருப்பு எள்	160	16



Karayil Trading Company

G/B52, Wholesale Food Grain Market, Koyambedu, Chennai

Ph: 9841289911, 9841495253, 8056406222

fssai 10018042003708

குறைந்த விலை | உயர்ந்த தரம் | அதிக சேமிப்பு

மசாலா மற்றும் பருப்பு	Price - 1 Kg	500 Gms
Coriander / மல்லி	90	45
Red Chilly / நீண்ட சிவப்பு மிளகாய்	120	60
Toor Dal / துவரம் பருப்பு	78	39
Urad Dal / உளுத்தம் பருப்பு	75	37.50
Pacha Payiru / பச்சை பயிரு	84	42
Kadala Paruppu / கடலை பருப்பு	72	36
Siru Paruppu / சிறு பருப்பு	80	40
Black Channa / கருப்பு கடலை	72	36
White Channa / வெள்ளை கடலை	80	40
Ground Nut / நிலக்கடலை	110	55
White Karamani / வெள்ளை காராமணி	95	47.50
Brown Karamani / சிகப்பு காராமணி	105	52.50
Pottu Kadalai / பொட்டுக் கடலை	84	42
Motchai / மொச்சை	85	42.50
Javvarisi / ஜவ்வரிசி	75	37.50
Green Peas / பச்சை பட்டாணி	79	39.50
Sugar / சர்க்கரை	38	19
Tamarind White / வெள்ளை புளி	180	90
Tamarind Black / கருப்பு புளி	160	80
Paav Jaggery / பாகு வெல்லம்	58	29
White Jaggery / அச்சு வெல்லம்	53	26.50

கோயம்பேடில் இருந்து 6 கி.மீ. சுற்றளவில் விநியோகம் இலவசம். அதற்கு மேல் 1 கி.மீட்டருக்கு ரூ.5.

Free Home Delivery With 6 KM Radius From Koyembedu. Beyond that will be Rs.5/- Per Km.

Prices Subject to Market Rates.

விலை சந்தை விகிதங்களுக்கு உட்பட்டது.